# THIRUMARAI AASAAN

**S. Rajanayagam**
**Editor**

86-A, Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.
PH. : 04257 - 230030 Cell : 98427 - 30382, 99655 - 30385

Pleading for the restoration of pure New Testament Christianity

Vol. 31 July 2018 Issue - 7

ஆசிரியர் உரை

# என்னிடத்தில் திரும்பு

**மி**க சமீபத்தில், பிரபலமான பிரசங்கி ஒருவர் பூரண வயதில் அயல்நாட்டில் மரித்துப்போனார். இவர் ஒரு பழுத்த பக்திமான். வேதாகமத்தின் காரியங்களில் தேறியவர். பழைய புதிய ஏற்பாட்டு சம்பவங்கள் இவருக்கு அத்துபடி. எளிய நடைப்பேச்சாளர். சிறந்த எழுத்தாளர். வேதகாமத்தின் கருத்துக்களை லாவகமாகக் கையாள்பவர். தன் வாழ்நாளில் அநேகருக்கு வேத வசனங்களைப் போதித்து பல போதகர்களை உருவாக்கியவர். அதைவிட முக்கியமாக, இரட்சிப்பின் திட்டத்தின் அழகை பாங்குற எடுத்துக்காட்டி, அநேக ஆத்துமாக்களைக் கொள்ளைப் பொருளாகக் கொண்டவர். இவரிடம், இவர் கர்த்தரால் எடுத்துக் கொள்ளப்படுவதற்கு சில நாட்களுக்கு முன்பாக, உங்களுக்கு பிடித்தமான பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசி யார் என்று கேட்ட போது, எரேமியா என்று பளிச்சென பதில் சொல்லியுள்ளார். இதை நான் இங்கு குறிப்பிடுவதற்கு காரணம், இந்த தேவ மனிதனை உயர்த்தி பேசுவதற்கு அல்ல. ஏனெனில், மனிதனைத் துதிப் பாடுவது எப்பொழுதுமே எனக்கு பிடிக்காத ஒன்று. மாறாக, எரேமியா தீர்க்கனுடைய மாண்பையும், சிறப்பையும் உணர்த்தி அறிவிப்பதே இதன் நோக்கம்.

ஆம், வேதாகமத்தின் காரியங்களை ஓரளவு முறையாக அறிந்தவர்களின் மனதில், நீங்கா இடம் பிடித்திருக்கும் தேவ மனிதர்களில் ஒருவன் தான் இந்த எரேமியா. தீர்க்கதரிசிகளைப் பொறுத்தளவில் இந்த எரேமியா தன்னிகரில்லாதவன். எருசலேமிலிருந்து 3 மைல்கள் தொலைவிலுள்ள ஆனதோத் என்னும் ஆசாரிய கிராமத்தைச் சேர்ந்த இவனை பரலோகத்தின் தேவன், தாயின் வயிற்றில் உருவாக்கும் முன்னே அறிந்து கருவறையிலேயே இவனை பரிசுத்தம் பண்ணி, தீர்க்கதரிசன ஊழியத்துக்குத் தெரிந்து கொண்டார்(ஏரே 1:5). **நான் பேச அறியாத சிறுபிள்ளையாயிருக்கிறேன்** என்று சொன்ன அந்தப்

பருவத்திலேயே இவனைத் தன்னுடைய தீர்க்கதரிசன ஊழியத்திற்கு அழைத்தும் கொண்டார்[1:6]. தேவ வார்த்தையினிமித்தம் தன் இல்லற வாழ்வைத் துறந்த ஒரு தியாகி இவன்[16:12].

யோசியா ராஜாவின் பதின்மூன்றாம் வருஷத்திலே இவன் தீர்க்கதரிசன ஊழியத்தைத் துவக்கின போது, தேவ விரோதச் செயலினிமித்தம் ஏற்கனவே வடக்கு இராஜ்ஜியமாகிய இஸ்ரவேல் எதிரிகளிடம் வீழ்ந்து போயிருந்தது. தெற்கு ராஜ்ஜியமாகிய யூதாவின் எருசலேம் மற்றும் அதனைச் சுற்றியுள்ளப் பகுதிகள் தவிர பிற பகுதிகளும் பிடிபட்டுப் போயிருந்தன. எருசலேம், அப்பொழுது தன்னை விக்கிரகங்களுக்கு அடிமைப் படுத்தியிருந்தது. தேவனுடைய நகரம் என்று அழைக்கப்பட்ட இந்த எருசலேமை காப்பாற்றும்படியாய் தன் கடைசிகட்ட முயற்சியாகத்தான் தேவன் நம்முடைய எரேமியாவை அழைத்தார். மிகுந்த தயக்கத்தோடும், வெகு தாழ்மையோடும், இளம் வயதில் தேவ கட்டளையை ஏற்றுக் கொண்டிருந்தாலும், தேவப்பணி என்று வந்த போது சற்றேனும் இவன் சளைக்கவில்லை. அபாரத் துணிவோடும், மிஞ்சின வைராக்கியத்தோடும் தன் ஊழியப்பணியை நடத்திக் காட்டினான்.

இவனால் தன் ஊழியப்பணியில் வெற்றி பெற முடியவில்லை என்பதும், எருசலேமைக் காப்பாற்ற முடியவில்லை என்பதும் உண்மைதான். ஆயினும், தேவன் இட்ட பணியில் அவன் தோற்றுப்போகவில்லை. ஆம், எரேமியா வசைச் சொற்களால் அலங்கரிக்கப்பட்டான் [12:6]. அடித்து துன்புறுத்தபட்டான் [38:6]. காவலில் வைக்கப்பட்டான் [37:15,16]. இருப்பினும், தேவ கட்டளைக்கு அவன் எந்நிலையிலும் சற்றேனும் ஓய்வு கொடுக்கவில்லை. தேவன் என்னைத்தை பேசும்படி சொன்னாரோ அதை அப்படியே பேசினான். இப்படி தேவனால் ஏவப்பட்டுப் பேசின ஒரு வசனம் தான், இந்த மாதத்துக்கான தலைப்பாகவும், பகுதியாகவும் உள்ளது.

இஸ்ரவேலே, நீ திரும்புகிறதுக்கு மனதாயிருந்தால் என்னிடத்தில் திரும்பு என்று கர்த்தர் சொல்லுகிறார், நீ உன் அருவருப்புகளை என் பார்வையினின்று அகற்றிவிட்டால், நீ இனி அலைந்து திரிவதில்லை[எரே 4:1].

இவ்வசனத்தைக் கொண்டு தேவன் இஸ்ரவேலை, குறிப்பாக எருசலேமின் குடிகளை மனந்திரும்ப அழைக்கிறார். மனந்திரும்பு என்ற பொருளைப் கொடுக்கக்கூடிய பழைய ஏற்பாட்டு வார்த்தைக்கான எபிரேய பதத்தின் பொருள் திரும்பு அல்லது திரும்ப வருதல் என்பது. இது ஒரு ஆழமான வார்த்தை, இதன்படி செய்வதற்கு மனம், இருதயம், செயல் ஆகிய மூன்றும் இணைந்து செயல்படுதல் அவசியம். பழைய, புதிய ஏற்பாடுகள் மனந்திரும்புதலுக்கு ஒரே பொருளைத்தான் தருகிறது. அங்கே திரும்பு என்று சொல்லுகிற அதே தேவன் தான் இங்கு மனந்திரும்பு என்று கூறுகிறார் அவ்வளவே !

சரி, இம்மாதத்திற்காக நாம் தெரிந்து கொண்டுள்ள எரேமிய 4:1 ம் வசனத்தை நாம் அருகில் சென்று பார்த்தால், அதிலிருந்து நாம் ஒரு மூன்று பாடங்களைக் கற்றுக் கொள்ள முடியும் என்று

தெரிகிறது. ஆகவே, அப்பாடங்கள் என்னவென்று இப்பொழுது பார்த்துப் பயனடைவோம்.

I. **இஸ்ரவேலே, நீ திரும்புகிறதற்கு மனதாயிருந்தால்.......**[வ.19]

எரே 4:1 ம் வசனத்தின் முதல் பகுதி சொல்லும் பாடம், ஒருவன் தேவனிடத்தில் திரும்புவதற்கு அதற்கேற்ற மனம் வேண்டுமென்பது.

சர்வவல்லமையுள்ள தேவன் எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து தான் அழைத்து வந்த இஸ்ரவேல் ஜனங்களுக்கு கொடுத்த கட்டளைகளில் முதலாவது கட்டளையே என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்க வேண்டாம் என்பது [யாத். 20:3].

இப்படி சொல்வதோடு அவர் நிற்காமல், இரண்டாம் கட்டளையாக, மேலே வானத்திலும், கீழே பூமியிலும், பூமியின் கீழ்த் தண்ணீரிலும் உண்டாயிருக்கிறவைகளுக்கு ஒப்பான ஒரு சொரூபத்தையாகிலும், யாதொரு விக்கிரகத்தையாகிலும் நீ உனக்கு உண்டாக்க வேண்டாம் என்றும் சொல்லியுள்ளார். [20:4]. ஆனால், இந்த நன்றிகெட்ட இஸ்ரவேலர்களோ, சர்வ வல்லவரை விட்டு விலகி விக்கிரகங்களுக்குத் தங்களை கொஞ்சம் கொஞ்சமாக அடிமைப்படுத்தினர். எரேமியாவின் நாட்களில் இச்சீர்கேடு உச்ச கட்டத்தை அடைந்திருந்தபடியால் வேதனையுற்ற தேவன், எரேமியாவைக் கொண்டு ஒரு கடைசி வாய்ப்பைக் கொடுக்க முன் வந்தார்.

இங்கே பாருங்கள், பரலோகத்தின் தேவன் அவரால் நினைக்கப்படுவதற்கு எந்த தகுதியும் இல்லாத மனிதனைப் பார்த்து கெஞ்சாக் குறையாக நீ திரும்புகிறதற்கு மனதாயிருந்தால், என்று கூறியுள்ளார். திரும்புகிறாயா, இல்லையா என்று அதட்டி, மிரட்டிப் பணியவைக்கும் அதிகாரம் கொண்ட தேவன், தன் அதிகாரத்தை அணுஅளவும் பயன்படுத்தாமல், மனதாயிருந்தால் என்று சொல்வதை நாம் கவனிக்க வேண்டும். தேவன் எவ்வளவு இரக்கமுள்ளவராக இருந்தால் இப்படி சொல்லியிருப்பார் என்று எண்ணிப்பாருங்கள். ஆதியிலே ஏதேன் தோட்டத்தில், ஆதாம், ஏவாளுக்கு கொடுத்த **சுய உரிமை** என்ற அதிகாரத்தை, அதன் பிறகு அவன் எவ்வளவு தான் கெட்டுப்போயிருந்தாலும் அவனிடமிருந்து பறிக்கவே இல்லை. மனம் மாற அவர் மாந்தரல்ல என்பதற்கு இதுவும் ஓர் உதாரணம். ஒவ்வொரு காரியத்திலும் அவனாக முடிவெடுக்க வேண்டுமென்றே அவர் விரும்புகிறார். ஆகவே தான், நீ திரும்புகிறதற்கு மனதாயிருந்தால் என்று கூறியுள்ளார்.

ஒரு சமயம், இயேசு ஆண்டவரால், சுகப்படுத்தப்பட்ட பிறவிக்குருடனை, அவரால் நடப்பிக்கப்பட்ட அற்புதத்தைப் பொய்யென்று நிரூபிக்கும்படியாய் பரிசேயர்கள் அவனை பாடாதபாடுபடுத்தினர். கேள்வி மேல் கேள்வி கேட்டும், அவன் மடங்காததினால், அவன் பெற்றோரிடம் சென்றனர். அவர்களும் பிடி கொடுக்காததால், மீண்டும் அவனிடம் வந்து உன் கண்களை

எப்படித் திறந்தான் என்றார்கள் [யோவா 9:26]. இவர்களில் விஷமத் தொல்லை தாங்க முடியாத, குருடனாயிருந்து சுகம் பெற்ற அந்த மனிதன், அவருக்கு சீஷராக உங்களுக்கும் **மனதுண்டோ?** என்றான்[9:27]. ஒரு காரியத்தை செய்வதற்கு **மனது** எவ்வளவு முக்கியமென்பதை அவன் கேட்ட கேள்வி சொல்லுகிறது. அடுத்து எருசலேமை இரட்சிக்கும்படியாய் எவ்வளவோ பிரயாசைகள் எடுத்த இயேசு, சிலுவைக்குப் போவதற்கு கொஞ்சம் முன்னதாக, எருசலேமைப் பார்த்து, உங்களுக்கோ **மனதில்லாமற் போயிற்று** என்று கண்ணீர் மல்கக் கூறினார். [மத்.23:37]. ஆவிக்குரிய வாழ்வுக்கு மனம் இவ்வளவு முக்கியமாக இருக்கிறபடியால் தான் யோவான் ஸ்நானகனும், நமது ஆண்டவரும் மனந்திரும்புங்கள் பரலோக ராஜ்ஜியம் சமீபமாயிருக்கிறது என்று பிரங்கித்தனர் [மத்.3:1;4:17].

அருமையானவர்களே! நாம் ஒவ்வொருவரும் எப்படிப்பட்ட மனம் கொண்டவர்களாக ஆவிக்குரிய வாழ்வில் இருக்கிறோம்? நம்முடைய மனம் தேவ காரியங்களுக்கு உடனடியாக கீழ்ப்படியக்கூடிய மனமாக இருக்கிறதா? அல்லது கீழ்ப்படிய மறுத்து எதிர்த்து நிற்கக்கூடிய மனமாக இருக்கிறதா? சொல்லுங்கள். தேவன் நமக்கு கொடுத்திருக்கும் சுதந்திரத்தை நாம் ஒரு போதும் இறுமாப்பாக ஆளாமல் [1பேது5:3]. அவர் சித்தத்திற்கு நம்மை ஒப்புகொடுப்பவர்களாக இருப்பது நல்லது. அதுதான் நன்மையானது, ஆசீர்வாதமானது.

II. **என்னிடத்தில் திரும்பு [வ.16]**

எரேமியா 4:1 ம் வசனத்தின் இரண்டாம்பகுதியிலிருந்து நமக்கு கிடைக்கும் பாடம், திரும்புகிற ஒருவன் தேவனிடத்திற்குத் திரும்ப வேண்டும் என்பது.

இன்றைய உலகத்தை நாம் கவனித்தால், திரும்புதல் என்பது எல்லா இடங்களிலும், எல்லா மட்டங்களிலும் நடந்து கொண்டுள்ள ஒன்றாகவே உள்ளது. திரும்புகிற வேலையை கிட்டத்தட்ட எல்லாரும் செய்து கொண்டு தான் உள்ளனர். ஒரு சமயத்தில் ஏதோ ஒரு தெய்வத்தை வணங்கிக் கொண்டு இருப்பவர்கள், வேறொரு தெய்வத்தின் பக்கமாக திரும்புகிறார்கள். இதுதான் சரி என்று ஏதோ ஒரு வழிபாட்டுத்தலத்திற்கு போய்க்கொண்டிருந்தவர்கள், பிறகு வேறொரு வழிபாட்டு தலத்திற்கு திரும்புகின்றார்கள். ஒரு காலத்தில் ஏதோ ஒரு பக்தி முறையைப் பின்பற்றியவர்கள், வேறொரு முறைக்குத் திரும்புகிறார்கள். இன்னும், தெய்வங்களை விட்டு விலகி மனிதர்களை வழிபடத்திரும்பும் கூத்துகளும் கூட நம் நாட்டில் நடக்கும் ஒன்றாகவே உள்ளது. இவை போக, அரசியல், சமுதாயம், கலாச்சார காரியங்களிலும் திரும்புதல் என்பது சகஜமான ஒன்றாகவே உள்ளது.

ஆனால், இங்கே எரேமியா தீர்க்கன் இப்படிப்பட்ட பொதுவான திரும்புதலைக் குறித்துப் பேசாமல், தன்னை

உண்டாக்கினவரிடத்தில் திரும்பும் ஆவிக்குரிய திரும்புதல் பற்றி அழுத்தம் திருத்தமாகக் கூறியுள்ளார். மெய்யான தேவனையும், அவர் தந்திருக்கும் சத்திய வழியையும் விட்டு அங்கும், இங்கும், எங்கும் திரும்புவது ஒருபோதும் அவருக்கு ஏற்புடையதல்ல . இன்றைக்கு மனிதன் தான் செய்கின்ற ஒரு தவறிலிருந்து இன்னொரு தவறிற்கு திரும்பி விட்டு, நான் திரும்பி விட்டேன் என்று சுயதிருப்தி பட்டுக் கொள்கிறான். இது குறித்து, ஓசியாவின் நாட்களில் விக்கிரகங்களிடமும், பொய்யான தெய்வங்களிடமும் திரும்பியவர்கள், மீண்டும் வேறொரு பொய்யான ஒன்றிடம் திரும்பினார்களேயல்லாமல், உன்னதமானவரிடத்தில் திரும்பவில்லை. இது எவ்வளவு கேடான நிலை என்று பாருங்கள்.

அருமையானவர்களே! இன்றைக்கும் கிறிஸ்தவ மத உலகில் காணப்படும் யதார்த்த நிலை அப்படியே எரேமியாவின் காலத்தையும், ஓசியாவின் நாட்களையும் பிரதிபலிப்பதாகவும், நினைவூட்டுவதாகவும் உள்ளது. தேவனிடத்திலும், அவரால் திட்டமிட்டுக் கட்டப்பட்ட சபையினிடத்திலும் [எபே 3:9]. உன்னதமானவரிடத்திலும், அவருடைய குமாரனாலே கொடுக்கப்பட்ட இரட்சிப்பை அருளும் சுவிசேஷத்தினிடத்திலும், திரும்பாமல், எங்கெங்கோ திரும்பிக் கொண்டிருக்கிறார்கள். அன்றைக்கு உன்னதமானவரை விட்டு விட்டு பொய்யான விக்கிரகங்களின் பின்னால் அலைந்தது போல, இன்றைக்கு இயேசுவாலே வாக்களித்துக்கட்டப்பட்ட [மத் 16:18] அவர் தம் சொந்த இரத்தத்தை சிந்தி சம்பாதித்த [அப் 20:28] சபையை விட்டு விட்டு, மனிதர்களால் கட்டப்பட்ட, வேத வசனங்களுக்குச் சற்றும் சம்பந்தமில்லாத சபைகளிடத்திற்குத் திரும்பி இருக்கிறார்கள். இன்னும் திரும்பிக் கொண்டே இருக்கிறார்கள். அன்றிலிருந்து, இன்று வரை இந்த மானிட சமுதாயம் இப்படி ஒரே விதமாக சிந்தித்து செயல்பட்டுக்கொண்டிருப்பது ஆச்சரியமான ஒன்றாக உள்ளது. ஆனால், தீமை செய்ய திரளான பேர்களைப் பின்பற்றாதிருப்பாயாக [ யாத். 23:2] என்றே வசனம் எச்சரிக்கிறது.

உன்னதமானவரிடத்தில் திரும்புங்கள் என்று சொல்லும் தீர்க்கன் ஓசியா, உன்னதமானவரிடத்தில் எப்படித் திரும்ப வேண்டும் என்றும் கூறுகிறார். அதாவது **வார்த்தைகளைக் கொண்டு** கர்த்தரிடத்தில் திரும்புங்கள் [ஓசி. 14:2] என்று. அற்புதங்களும், நேரிடையான தேவ வெளிப்பாடுகளும் இருந்த அந்த நாட்களிலேயே, **வார்த்தைகளைக் கொண்டு** கர்த்தரிடத்தில் திரும்புங்கள் என்று சொல்லியிருப்பதை நாம் கவனிக்கத் தவறிவிடக் கூடாது. ஆனால். அற்புதங்களும், நேரிடையான வெளிப்பாடுகளும் அற்றுப் போன [1 கொரி. 13:8-10] இன்றைக்கு என்ன நடக்கிறது? தேவனுடைய வார்த்தைகளுக்குக் கொடுக்கப்பட வேண்டிய உரிய முக்கியத்துவம் தேவனையும், கிறிஸ்துவையும் பின்பற்றுகிறோம் என்பவர்களால் கொடுக்கப்படுகிறதா? அப்படியானால் எதை நாடி கிறிஸ்தவம் போய்க்கொண்டிருக்கிறது? சொல்லுங்கள்!

வேதவசனங்கள் எனக்குத் தேவையில்லை. அதற்கு மாறாக, தேவன் என்னோடு பேச வேண்டும். எனக்கு தரிசனம் கொடுக்க வேண்டும், என்னிடத்தில் அற்புதம் செய்யவேண்டும், எனக்கு ஏதாவது அடையாளம் காட்ட வேண்டும், எனக்கு அந்நிய பாஷை தரவேண்டும், என்னை அபிஷேகத்தால் நிரப்பவேண்டும், குறைந்த பட்சம் ஒரு சத்தமோ, அல்லது ஒளியோ எனக்கு வெளிப்பட வேண்டுமென்றல்லவா பெரும்பாலோர் கேட்கிறார்கள். ஆனால் தேவனோ, உன்னதமானவரிடத்தில் திரும்ப விரும்பும் ஒருவனுக்கு **தேவனுடைய வார்த்தை போதும்** என்று சொல்கிறார். யார் சொல்வது சரி? படைத்தவராகிய தேவனா அல்லது படைப்பாகிய மனிதனா? தேவனுடைய வார்த்தையின் மகிமையை எபிரெய ஆசிரியர் எங்ஙனம் விவரிக்கிறார் பாருங்கள். **தேவனுடைய வார்த்தையானது ஜீவனும், வல்லமையும் உள்ளதாயும், இருபுறமும் கருக்குள்ள எந்தப் பட்டயத்திலும் கருக்கானதாயும், ஆத்துமாவையும், ஆவியையும், கணுக்களையும், ஊனையும், பிரிக்கத்தக்கதாக உருவக்குத்துகிறதாயும், இருதயத்தின் நினைவுகளையும், யோசனைகளையும் வகையறுக்கிறதாகவும்** இருக்கிறது[எபி. 4:12]. இப்படிப்பட்ட வசனத்தைதான், அப்போஸ்தலன் பவுல், எல்லாவற்றுக்கும் போதும் என்கிறார். [2தீமோ. 3:16,17] அத்தோடு, இரட்சிப்பின் வசனம் [அப். 13:26]. அதாவது, ஒருவனை என்றும் இரட்சிப்புக்கு வழி நடத்தும் வல்லமையுள்ள வசனம் என்று கூறுகிறார்.

அருமையானவர்களே, ஒருவனுடைய இரட்சிப்புக்கு வசனம் போதும், அவன் பரலோகம் செல்ல வசனம் தரும் இரட்சிப்பு போதும். அப்படியானால், மற்றவையெல்லாம் எதற்கு? தேவையே இல்லை தானே! வசனத்தின் மேன்மை பற்றி நம் எபிரேமியாவின் கூற்றையும் பாருங்கள். **கர்த்தாவே உம்முடைய கண்கள் சத்தியத்தை அல்லவோ நோக்குகிறது** [எரே 5:3]. சத்தியம் என்றால் தேவனுடைய வசனம் [யோவா 17:17]. தேவன் வசனத்தை நோக்குகிறார். இந்த தேவன் இரட்சிப்பை வசனத்தில் வைத்துமிருக்கிறார். ஆகவே, அவரிடத்தில் திரும்புவது நம்முடைய உண்மையான நோக்கமாக இருக்குமானால், அவருடைய வல்லமையான வார்த்தைகளிடத்தில், குறிப்பாக, இன்றைக்கு நம்மைக் கட்டுப்படுத்தும் கிறிஸ்து இயேசுவின் வார்த்தைகளடங்கிய புதிய ஏற்பாட்டு வசனங்களிடத்தில் திரும்ப வேண்டும். ஏனெனில், இயேசுவானவர் சொன்ன வசனங்கள் தான் நம்மை கடைசி நாளில் நியாயந்தீர்க்கப்போகிறது[யோவா 12:48] இந்த உண்மை எப்போதும் நம் நினைவிலிருக்க வேண்டும்.

III. **நீ உன் அருவருப்புகளை என் பார்வையினின்று அகற்றிவிடு** [வ.1]

எரேமியா 4:1- ம் வசனத்தின் மூன்றாம் பகுதி நமக்கு சொல்லும் பாடம், தேவனிடத்தில் திரும்ப விரும்பும் ஒருவன், முதலாவது, அருவருப்புகளை அகற்றிவிட வேண்டுமென்பது.

மனதாயிருந்தால் என்னிடத்தில் திரும்பு என்று எரேமியாவை கொண்டு சொன்ன தேவன், அப்படித் திரும்ப நினைப்பவர்களுக்கு ஒரு நிபந்தனை கொடுக்கிறார். எந்த ஒரு நிபந்தனையையும் விரும்பாத ஒரு காலகட்டத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்பது உண்மைதான். தகுதி எதுவும் தேவையில்லை, ஆனாலும் உங்களுக்கு நன்மை இருக்கிறது, இவ்வளவு நன்மை இருக்கிறது. இவ்வளவு வருமானம் இருக்கிறது என்ற விளம்பரங்களை நம்முடைய நாட்களில் நாள்தோறும் நாளிதழ்களிலும், தொலைக்காட்சியிலும் பார்த்து கொண்டு தான் உள்ளோம்.

ஆனால், சர்வவல்லவருடைய அணுகுமுறையையும், செயல்பாட்டையும் நாம் ஆதியிலே இருந்து கவனித்தால், அது வேறு விதமாகவே இருந்து வந்திருப்பதை அறியலாம். இஸ்ரவேலை ஆசீர்வதிப்பது அவருக்குப் பிரியமான காரியமாக இருந்தாலும்(எண் 24:1) அந்த ஆசீர்வாதங்கள் அனைத்தையும் அவர் நிபந்தனைகளுக்கு உட்படுத்தியே வைத்திருக்கிறார். நீ எதுவுமே செய்யத் தேவையில்லை, எதையும் விடத்தேவையில்லை, எங்கும் போகத் தேவையில்லை, எதற்கும் கீழ்ப்படியத் தேவையில்லை, ஆனால், அனைத்து ஆசீர்வாதங்களும் உன் வசமாகும் என்று நம்முடைய நாட்களில் உள்ள பிரசங்கிகள் பலர் வாக்களிப்பது போல, தேவன் வாக்களிப்பது இல்லை, இதோ இன்று நான் உங்களுக்கு முன்பாக ஆசீர்வாதத்தையும், சாபத்தையும் வைத்திருக்கிறேன். இன்று நான் உங்களுக்கு கற்பிக்கிற உங்கள் தேவனாகிய கர்த்தரின் கட்டளைகளோடு ஆசீர்வாதமும் சாபமும் சம்பந்தப்பட்டிருக்கிறது என்றே கூறியுள்ளார்(உபா. 11:26:28).

எரேமியாவில், என்னிடத்தில் வா என்று அழைக்கிற தேவன், அப்படி வருவதற்கு முன்பாக உன் அருவருப்புகளை அகற்று என்று கூறுகிறார். அருவருப்பு என்பது, தேவன் வெறுக்கிற ஒன்று. தேவன் எவைகளையெல்லாம் வெறுக்கிறார் என்பதை சொல்லவேண்டுமானால் ஒரு பெரிய பட்டியல் போடவேண்டும். அதற்கு பதிலாக, இதை ஒரே வார்த்தையில் சொல்லிவிடலாம், தேவனிடத்தில் வருவதற்கு முன்பு **பாவத்தை அகற்றிவிடு** என்று. தேவன் எரேமியாவைக் கொண்டு சொல்லும் போது, நீ உன் அருவருப்புகளை அகற்றிவிட்டால், இனி நீ அலைந்து திரிவதில்லை என்கிறார். அதன் பொருள், வரப்போகும், பாபிலோனியா படையெடுப்பின் பாதிப்பிலிருந்து நீ தப்பித்துக் கொள்ளலாம் என்பதே.

அருமையானவர்களே! அங்கே எரேமியா தீர்க்கனைக் கொண்டு சொல்லப்பட்டிருக்கும் அதே கருத்து தான் இன்றைக்கு நமக்கும் பொருந்துகிறதாக உள்ளது. வரபோகும் நித்திய அழிவிலிருந்து நாம் நம்மைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டுமானால் பாவமாகிய அருவருப்புகளை நாம் அகற்றியாக வேண்டும். தேவனுக்கும், நமக்கும் இடையேயான பாவங்களை நாம் குழிதோண்டிப் புதைத்தாக வேண்டும். அப்படிச் செய்யாத

பட்சத்தில் தேவனிடமிருந்து நாம் எந்த நன்மையையும், ஆசீர்வாதத்தையும் எதிர்பார்க்க முடியாது. ஆவிக்குரிய வாழ்விலும், சரீர வாழ்விலும் நாம் அலைந்து திரிகிறவர்களாகவே இருப்போம்.

யோவான் ஸ்நானகன் ஊழியம் செய்த அந்த நாட்களில், அவனிடத்தில் ஞானஸ்நானம் பெறப் புறப்பட்டு வந்த திரளான ஜனங்களைப் பார்த்து.... மனந்திரும்புதலுக்கேற்ற கனிகளைக் கொடுங்கள் என்றான் [லூக். 3:7,8]. அதாவது, ஞானஸ்நானம் பெறுவதற்கு உங்களைத் தகுதியாக்கும்படியாய், உங்களுக்கும், தேவனுக்கும் இடையேயிருப்பவைகளை எடுத்துப் போடுங்கள் என்று எச்சரித்தான். தேவன் வெறுக்கும் அருவருப்புகளோடு நாம் தேவனிடத்தில் சேரவே முடியாது. ஆனால், இன்றைக்கு கிறிஸ்தவ உலகில் என்ன நடக்கிறது? பாவத்தைப் பற்றிப் பேச ஊழியர்களும் முன்வருவதில்லை; பாவம் கண்டித்து உணர்த்தப்படுவதை விசுவாசிகளும் விரும்புவதில்லை, ஒரு விதமான தேவ விரோதக்கூட்டு இரண்டு சாராருக்குமிடையே இழையோடிக் காணப்படுகிறது.

எனக்கன்பான தேவ ஜனமே! இப்படிப்பட்ட மோசடிகளின் மூலம் ஆவிக்குரிய வாழ்வில் நாம் யாரும் ஏமாந்து போக வேண்டாம். கிறிஸ்தவ மாத இதழ்களில் தாராளமாக வெளிவரும் விதவிதமான வாக்குத்தத்த வசனங்களில் மயங்கிவிட வேண்டாம். கிறிஸ்தவ தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் டன் கணக்கில் வாரி வழங்கப்படும் ஆசீர்வாத வார்த்தைகளில் உன் மதியை இழந்து விடவேண்டாம். எரேமியா போன்ற தேவ மனிதர்கள் பிழைக்கத் தெரியாதவர்கள் அல்ல. மாறாக, சத்தியத்தை சத்தமாகவும், சுத்தமாகவும் பேசியவர்கள். எச்சரிப்பு கொடுப்பவர்கள் தான் தேவனுடைய உண்மையான ஊழியக்காரர்கள், அவர்கள்தான் தேவ வார்த்தைகள் என்று வரும் போது எந்த சலசலப்புக்கும் அஞ்சாதவர்கள். அவர்கள் தான் எதிர்ப்பைக்கண்டு மிரளாமல் எச்சரிப்பு கொடுப்பவர்கள். யோவான் ஸ்நானகனின் பிரசங்கம், இயேசுவின் ஊழியம், அப்போஸ்தலர்களின் சுவிசேஷப் பணி போன்றவை இந்த விதமாகத்தான் இருந்தது. ஆனால், இன்றைய ஊழியமும், கிறிஸ்தவமும் இதற்கு எதிர் திசையிலே ஜம் ஜம் என்று போய்க் கொண்டிருக்கிறது. இந்த இழிநிலை, நித்திய நரகத்திற்குத் தான் வழிநடத்தும் என்பதில் யாருக்கும் சந்தேகம் இருக்க வேண்டாம்.

ஆகவே, இதை வாசிக்கும் அருமையானவர்களே, நித்திய நரகத்திலிருந்து நாம் நம்மைக் காப்பாற்றிக் கொள்ள, பாவமாகிய எல்லா அருவருப்புகளிலிருந்தும், அதாவது, தேவனுடைய வார்த்தைகளுக்கு விரோதமாக நாம் செய்து கொண்டிருக்கும் எல்லா செயல்களிலிருந்தும் நம்மை விடுதலையாக்கும்படியாய், விசுவாசித்து [மாற். 16:16]. மனந்திரும்பி [அப். 2:38] அறிக்கையிட்டு [ரோம 10:9,10]. பாவ மன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுவோம் [அப்.22:16]. அதன் மூலம் நம்முடைய பூமிக்குண்டான சரீர வாழ்விலும், மறுமைக்குண்டான ஆவியின் வாழ்விலும் அலைந்து திரியாமல் நம்மை காப்பாற்றிக் கொள்ளுவோம்.

தேவன் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக! ஆமென்!! ★

# அந்நிய பாஷைகளில் பேசுதல்

Bro. J.C. சோட்

**மு**க்கியமாக பெந்தெகொஸ்தே கூட்டங்களிலும் இன்னும் பிற மதபிரிவினரிலும் கூட, தேவனுடைய பிள்ளைகள் இன்று பரிசுத்த ஆவியானவரைப் பெறுகின்றனர் எனவும் அதன், அடயாளமாக அதைப் பெற்றுக்கொண்டவர்கள் அந்நிய பாஷைகளில் பேசுகின்றனர் எனவும் நம்புகின்றனர். யாருக்கும் புரியாத சில வினோதமான சத்தங்களை எழுப்பி , இது என்ன என்று கேட்பவர்களிடம் அது தேவன் புரிந்து கொள்ளும் பரலோக பாஷை என்று கூறி, அதுவே அந்நிய பாஷை என்றும் சொல்கின்றனர். சில வேளைகளில், அவர்களில் ஒருவன் பரிசுத்த ஆவியின் வல்லமைகளைப் பெற்றுக் கொண்டதாக அறிவிக்கப்பட்ட பின்னும் அந்த வேடிக்கையான சத்தங்களை எழுப்ப முடியாமல் இருந்தால், கட்டாயத்தின் பேரில் அவர்களைப் பின்பற்றி, அவன் ஏதாவது உளரும் போது அவன் ஏற்றுக்கொள்ளப்படுகிறான். இது அவர்களைப் பற்றி நாம் கற்பனையாக கூறுவது அல்ல. மாறாக, அந்தக் கூட்டத்தில் இருந்தவர்களே அவர்களுடைய தவறான போதனைகளைக் கண்டபின் அவர்களை விட்டு விலகி வெளியே வந்து கூறியவைகள் தான் இவைகள்.

ஆனால், இந்தக் காரியத்தைப் பற்றி வேதகாமம் என்ன சொல்லுகிறது என்று காண நாம் இப்போது வேத வசனங்களுக்குள்ளாகச் செல்வோம். தாம் சென்ற பின் பரிசுத்த ஆவியை அப்போஸ்தலர்களிடம் அனுப்புவதாக கிறிஸ்து வாக்களித்தார். (யோவான் 14:26). அப்போஸ்தலர்கள் பரிசுத்த ஆவியானவரின் திருமுழுக்கு பெற்றதும் அதன் அடையாளங்களில் ஒன்றாக 'ஆவியானவர் தங்களுக்குத் தந்தருளின வரத்தின் படியே' வெவ்வேறு பாஷைகளில் பேசத் தொடங்கினார்கள். (அப்.2:1-4) வசனம் மேலும் கூறுகிறது. வானத்தின் கீழிருக்கிற சகல தேசத்தாரிலுமிருந்து வந்த தேவ பக்தியுள்ள யூதர்கள் அப்பொழுது எருசலேமிலே வாசம் பண்ணினார்கள். அந்தச் சத்தம் உண்டான போது, திரளான ஜனங்கள் கூடிவந்து, தங்கள் தங்கள் பாஷைகளிலே அவர்கள் பேசுகிறதை அவரவர்கள் கேட்டபடியினாலே கலக்கமடைந்தார்கள் (அப். 2:5-6) என்கிறது.

மேலும் தொடரும் போது, கூடி வந்திருந்த பலநாட்டு மக்களும் ஆச்சரியமும் குழப்பமும் அடைந்தனர். எளிய, கல்வி அறிவற்ற கலிலேயர்கள் இவ்வாறு பல மொழிகளில் பேசுதல் அவர்கள் குடிபோதையில் இருக்கவேண்டுமென்று முடிவு செய்தனர். என்றாலும் மக்கள் நினைப்பதைப் போல அவர்கள் குடித்திருக்கவில்லை என்றும், அது காலை வேளையாக இருப்பதையும் போதுரு அவர்களுக்கு விளக்குகிறார். மேலுமாக, அங்கே நடந்தவையாவும் யோவேல் தீர்க்கதரிசியால்

ஏற்கனவே முன்னறிவிக்கப்பட்டபடி, கடைசி நாட்களில் மாம்சமானயாவர் மேலும் எவ்வாறு கர்த்தர் தமது ஆவியை ஊற்றுவதாகக் கூறினாரோ அதுவே அங்கு நடந்து கொண்டிருந்தது. [அப். 2:7-17] வேறு விதமாகச் சொன்னால், அப்போஸ்தலர்களை அவர் பரிசுத்த ஆவியானவரால் திருமுழுக்குப் பெறச்செய்தார்; குறிப்பிட்ட சில சீடர்கள் கைகளை வைத்துப் பெறும் அளவிலான பரிசுத்த ஆவியைப் பெற்றனர்; தேவனுக்கு கீழ்படிந்த மற்ற பிற எல்லா மக்களும் அற்புதங்கள் செய்ய இயலாத வரம் அல்லது அளவுடன் கூடிய பரிசுத்த ஆவியைப் பெற்றனர்.

பரிசுத்த ஆவியானவரின் திருமுழுக்கைப் பெற்றதின் விளைவாக, ஏற்கனவே குறிப்பிட்டபடி, அப்போஸ்தலர்கள் அந்நிய பாஷைகளில் பேசக்கூடியவர்களாக இருந்தனர். உலகின் பல பகுதிகளிலுமிருந்து வந்த, பல்வேறு மொழிகள் பேசும் பல மக்களிடம் அவர்கள் பேசவேண்டியதிருக்கும் எனக் கர்த்தருக்குத் தெரியும். எனவே அவர்கள் எங்கிருந்த போதிலும் அங்குள்ள மக்களின் பிரந்திய மொழிகளில் பேசக்கூடிய திறமையைக் அவர் அவர்களுக்குக் கொடுத்தார். அவர்கள் தேவனுடைய விருப்பத்தை அறிவிக்க அவரால் அனுப்பப்பட்டவர்கள் என இந்த மக்களைத் திருப்திப்படுத்தவும், கர்த்தருடைய உபதேசத்தை விரைவிலே பல இடங்களுக்கு அறிவிக்க உதவவும் இது ஒரு வழியாக இருந்து, அதாவது, பிராந்திய மொழிகளைக் கற்றுக் கொள்ள நேரத்தைச் செலவிட வேண்டியதும் இல்லை. அல்லது மொழி பெயர்ப்பாளர்களை உபயோகிக்கத் தேவையுமில்லை. ஆனால் வேற்று மொழி மக்களிடம் அவர்களுடைய மொழிகளிலே நேரிடையாகப் பேச முடிந்தது.

அதோடு, அப்போஸ்தலர்கள் கைகளை வைத்து பரிசுத்த ஆவியின் வல்லமையைக்கொடுத்த எல்லோரும் அந்நிய பாஷைகளில் பேச முடிந்தது. ஒரு மக்கள் கூட்டத்தை பவுல் மனமாற்றினதை அப்போஸ்தலர் நடபடிகள் 19-ம் அதிகாரத்தில் நாம் படிக்கிறோம். வசனம் தொடர்ந்து கூறுகிறது. 'அல்லாமலும் பவுல் அவர்கள் மேல் கைகளை வைத்த போது, பரிசுத்த ஆவியானவர் அவர்கள் மேல் வந்தார்; அப்பொழுது அவர்கள் அந்நிய பாஷைகளைப் பேசித் தீர்க்கதரிசனஞ் சொன்னார்கள்'. [அப்.19:6] அப்போஸ்தலர்கள் மொத்தம் 12 பேர்கள் மட்டுமே என்பதும், பின்பு பவுல் அழைக்கப்பட்டு மொத்தம் 13 பேர்கள் மாத்திரமே இறுதியாக இருந்தனர் என்பது கர்த்தருக்குத் தெரியும். அவர்கள் பல திசைகளுக்கும் சொல்லுவார்கள். அவர்களுக்கு உதவி தேவை என்பதும் அவருக்குத் தெரியும். எனவே, தேர்ந்தெடுக்கப்பட்ட சில சீடர்களின் மேல் கைகளை வைத்து அவர்களும் கூட பரிசுத்த ஆவியின் வல்லமையைப் பெற்றுக் கொள்ளத்தக்கதாக அப்போஸ்தலர்களுக்குக் கர்த்தர் அனுமதி அளித்தார். அவ்வாறு கைகளை வைத்துப்பெறும் அளவிளான பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொண்ட அடையாளத்தின் ஒரு பகுதியாக அவர்களும் அந்நிய பாஷைகளில் பேசக்கூடிய வல்லமை பெற்றனர்.

அப்போஸ்தலர் நடபடி 2:38- ம் வசனத்தில் குறிப்பிட்டபடி சாதாரண அளவிலான பரிசுத்த ஆவியை, அல்லது அற்புதங்கள்

செய்ய இயலாத அளவிலான பரிசுத்த ஆவியைப் பெற்றவர்களின் நிலை என்ன? அவர்கள் அந்நிய பாஷைகளில் பேசமுடிந்ததா? இல்லை. அவர்களால் முடியவில்லை. அவர்கள் அவ்வாறு அந்நிய பாஷையில் பேசியதாக புதிய ஏற்பாட்டில் எங்கும் ஒரு உதாரணம் கூட காணப்படவில்லை. மேலும், இன்று அப்போஸ்தலர்கள் ஒவ்வரும் இல்லையாதலாலும், அப்போஸ்தலர்கள் கைகளை வைத்து பரிசுத்த ஆவியின் வல்லமையைக் கொடுத்தவர்கள் அனைவரும் மரித்துப்போய்விட்டதாலும், அப்போஸ்தலர்களுடைய காலத்தில் நடந்ததைப் போல, இன்று யாரும் அந்நிய பாஷையில் அற்புதமாகப் பேச முடியாது. ஆனால் தாங்கள் பேசுவதாக சொல்லும் அநேகர் இன்றும் இருக்கின்றனர். என்றாலும், அவர்கள் செய்வதொல்லாம் யாருக்கும் புரியாத உளறலான சத்தங்களை உண்டாக்குவதைத்தவிர வேறல்ல.

உலகின் பிற பாகங்களுக்கு இவர்கள் செல்லும் போது அந்தப் பகுதியில் பேசப்படும் பாஷைகளை நேரம் எடுத்துக் கற்றுக்கொள்கின்றன அல்லது மொழியாக்கம் செய்யும் நபர்களை உபயோகிக்கின்றனர். அந்நிய பாஷையில் பேசுவதாக உரிமை கோரும் எல்லா பிரசங்கிமார்களும் பிறநாடுகளுக்குச் செல்லும் போது அவர்களுடைய பிரசங்கங்களை மொழியாக்கம் செய்ய வேறு யாரையாவது தேடி அமர்த்திக்கொள்வதில்லை. அதுவே அவர்கள் பரிசுத்த ஆவியின் திருமுழுக்கைப் பெறவில்லை என்பதை நிரூபிக்கிறது. எனவே, அந்நாட்களிலே அப்போஸ்தலர்கள் பேசியதைப் போல அந்நிய பாஷைகளில் இவர்களால் பேச முடிவதில்லை.

அந்நிய பாஷை என்றால் என்ன? அதற்கு அர்த்தம் அதுவேதான்! நமக்குத் தெரியாத அந்நியமான ஒரு மொழி. அந்த மொழியைப் பேசுகிற எவரும் அங்கு இல்லையென்றால் அல்லது மொழியாக்கம் செய்யவும் ஒருவரும் இல்லையென்றால், அந்நபர் அமைதியாக இருக்க வேண்டுமென புத்திமதி கூறப்பட்டது. பவுல் கூறுகிறார்: உங்களெல்லாரிலும் நான் அதிகமாய் பாஷைகளைப் பேசுகிறேன், இதற்காக என் தேவனை ஸ்தோத்தரிக்கிறேன். அப்படியிருந்தும், நான் சபையிலே அந்நிய பாஷையில் பதினாயிரம் வார்த்தைகளைப் பேசுகிறதிலும், மற்றவர்களை உணர்த்தும் படி என் கருத்தோடே ஐந்து வார்த்தைகளைப் பேசுகிறதே எனக்கு அதிக விருப்பமாயிருக்கும். (1கொரி. 14:18,19) பல மொழிகளில் பேசும் வல்லமையை தான் பெற்றிருப்பதாகப் பவுல் இங்கு கூறுகிறார். என்றாலும், புரிந்து கொள்ள முடியாத பதினாயிரம் வார்த்தைகளைவிட புரிந்து கொள்ளக் கூடிய ஐந்து வார்த்தைகளைப் பேசுவதையே தாம் விரும்புவதாகக் கூறினார்.

பவுல் மேலுமாக கூறும்போது அந்நிய பாஷையில் பேசுவது அவிசுவாசிகளுக்கு ஓர் அடையாளமாக இருந்ததே தவிர, சபைக்கு அல்ல என்கிறார். 'அப்படியிருக்க, அந்நிய பாஷைகள் விசுவாசிகளுக்கு அடையாளமாக இராமல், அவிசுவாசிகளுக்கு அடையாளமாயிருக்கிறது; தீர்க்கதரிசனமோ அவிசுவாசிகளுக்கு அடையாளமாயிராமல் விசுவாசிகளுக்கு அடையாளமாக

இருக்கிறது' என அவர் கூறினார். (1கொரி. 14:22). அப்போஸ்தலர்களும் அவர்கள் கைகளை வைத்துப் பரிசுத்த ஆவியைப் பெற்று கொண்டவர்களும் அந்நிய பாஷையில் பேசும் காரணங்களில் ஒன்று, அவர்கள் தேவனால் அனுப்பப்பட்டவர்கள் என்று மக்களை நம்பச் செய்யவும், அதன் வழியாக அவர்களில் விசுவாசிகளை உண்டாக்கவும் என்பதாக நாம் ஏற்கனவே சுட்டிக் காட்டியுள்ளோம். அதையே தான் பவுல் இங்கு சொல்லிக் கொண்டிருக்கிறார். ஆனால், இன்றைய நவீன உலகில் அந்நிய பாஷைகளைப் பேசுவதாக கூறப்படும் ஆராதனைக் கூட்டங்களுக்குச் சென்றால், அங்கு விசுவாசிகளைக் கொண்டு ஏற்படுத்தப்பட்ட ஒரு கூட்டத்தைக் காணலாம். இதிலும் கூட, வசனத்தில் கூறப்பட்ட முறைகளைப் அவர்கள் பின்பற்றுவதில்லை.

இறுதியாக, அந்நிய பாஷைகள் ஒரு கால கட்டத்தில் ஒழிந்து போகும் என்று பவுல் கூறினார். அதாவது அற்புதமாக அந்நிய பாஷையில் பேசுவது ஒழிந்து போகும் காலம் ஒன்று வரும் என அவர் கூறினார். அப்படி ஒழிந்து போவது எப்போது வருவதாக இருந்தது? இறுதியாக, புதிய ஏற்பாடு முற்றிலுமாக எழுதப்பட்டு மனிதனுக்கு கொடுக்கப்பட்ட வேளைகளில் அது முடிந்து போகும் காலம் வரும் எனபவுல் கூறினார்; ' அன்பு ஒரு காலும் ஒழியாது. தீர்க்க தரிசனங்களாலும் ஒழிந்துபோம்; அந்நிய பாஷைகளினாலும் ஒழிந்துப்போம், அறிவானாலும் ஒழிந்துபோம் நம்முடைய அறிவு குறைந்துள்ளது. நிறைவானது வரும் போது குறைவானது ஒழிந்துபோம்'. (ஐ கொரிந்தியர் 13:8,10) நிறைவானது அல்லது பூரணமானது என அவர் இங்கு கூறுவது எதைப் பற்றி? சுயாதீனப் பிரமாணமாகிய பூரணபிரமாணம் என புதிய ஏற்பாட்டைக் குறிப்பிட்டு யாக்கோபு கூறுகிறார். புதிய ஏற்பாடு கொடுக்கப்படும் வரையில் மனிதனுக்கு உதவியாக இருக்க மட்டுமே அற்புதங்கள், அந்நியபாஷைகள் போன்றவை நடந்தன. ஆனால், ஒருமுறை புதிய ஏற்பாடு வந்த பின்னர் இவை அனைத்தும் இனி தேவைப்படவில்லை.

பரிசுத்த ஆவியானவரின் திருமுழுக்கைப் பெற்றுக்கொண்டதாகவும், அதன் காரணமாக அற்புதங்களைச் செய்யவும், அந்நிய பாஷைகளைப் பேசவும் முடிகிறது என இன்று உரிமை கொண்டாடும் அனைவரும் பிரிவினைவாதிகளாக இருக்கின்றனர். ஆம் ஒருவரை ஒருவர் எதிர்க்கின்றனர். மனிதப் பெயர்களை தங்களுடைய குழுக்களுக்கு வைத்துக் கொள்ளுகின்றனர். அவர்கள் புதிய ஏற்பாட்டில் காணப்படாத சபைகளில் அங்கத்தினர்களாகி இருக்கின்றனர் என்பதை மனதில் வைத்துக் கொள்ளுங்கள். இப்படியாக, வெவ்வேறு பிரிவினை சபைகளைப் சார்ந்தவர்கள் பரிசுத்த ஆவியின் திருமுழுக்கைப் பெற்றிருப்பதாக எப்படி உரிமை கொண்டாட முடியும்? பரிசுத்த ஆவியானவர் அவர்களிடம் இல்லை என்பது மட்டுமல்ல, அவர்கள் ஏமாற்றப்பட்டிருப்பதோடு, அவர்களுக்கு செவி சாய்வோரையும் ஏமாற்றிக் கொண்டிருக்கின்றனர். இப்படிப்பட்டவர்கள் உங்களிடம் வந்து, உங்களை ஏமாற்றி திசைதிருப்பி விட அனுமதிக்காதீர்கள். பரிசுத்த ஆவியானவரைப் பற்றிய சத்தியங்களுக்கும், நமது இரட்சிப்பு சம்பந்தப்பட்ட பிற எல்லாகாரியங்களுக்கும், நித்திய வாழ்விற்கான நம்பிக்கைக்கும் வேத வசனங்களுக்கு மட்டுமே நாம் செவி சாய்க்க வேண்டும். ★

பெண்கள் பகுதி

# பெண்களும், ஊழியமும்

Sis. ரேச்சல் இராஜநாயகம்

பெண்கள் விடுதலை இயக்கம் ஆரம்பிக்கப்பட்டதற்குப் பிறகு பெண்களை, ஆண்களுக்கு மேலான இடத்தில் வைக்க வேண்டுமென்பதற்கான முயற்சிகள் மேலும், மேலும் எடுக்கப்பட்டு வருகின்றன. பல பிரிவினைச் சபைகள், பெண்களை தங்கள் சபைகளில் பிரசங்கிகளாகவும், மூப்பர்களாகவும் சபை பொறுப்பாளர்களாகவும் நியமிக்கும் பணியை துவக்கிவிட்டன. பிரிவினைச் சபைகள் பெண்களை தலைமைப் பொறுப்பில் வைப்பது ஆச்சரியமான ஒன்றல்ல. ஏனெனில், அவர்கள் தேவனுடைய வார்த்தைகளின் அதிகாரத்தை மதிப்பதில்லை. அவர்கள் எப்படியோ இருக்கட்டும், வேதனை தரக்கூடிய விஷயம் என்னவென்றால், கர்த்தருடைய சபையில், சில அங்கத்தினர்கள், பெண்கள் பிரசங்கிகளாகவும், மூப்பர்களாகவும், மற்றும் வழிநடத்துபவர்களாகவும் வரவேண்டுமென்று விரும்புகிறார்கள்.

சபையில் பெண்களுடைய பங்கு எப்படியிருக்க வேண்டுமென்பதற்கு. தீமாத்தேயு 2–ம் அதிகாரத்தில் அறிவுரைகள் தேவன் கொடுத்துள்ளார். ஆண்கள் ஜெபத்தில் வழிநடத்த வேண்டுமென்று கூறுகிறார் (வ.8). பெண்கள் தங்களை எப்படி உடுத்திக்கொள்ள வேண்டுமென்று அறிவுரை கூறியுள்ளவர் (வ.9,10). அவள் 'அடக்கமுடையவளாயிருந்து, அமைதலோடே கற்றுக் கொள்ள வேண்டுமென்று கூறுகிறார் (வ.11). மீண்டும் உபதேசம் பண்ணவும். புருஷன்மேல் அதிகாரஞ் செலுத்தவும். ஸ்திரீயானவளுக்கு நான் உத்தரவு கொடுக்கிறதில்லை: அவள் அமைதலாயிருக்க வேண்டுமென்று கூறுகிறார். ஏன், பெண்கள் மீது இப்படிக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருக்கிறதென்பதற்கான காரணத்தை 13 முதல் 15 வசனங்களில் விளக்கியுள்ளார்.

சபையாகக் கூடி வந்திருக்கும் போது பெண்களின் பங்கு எப்படியிருக்க வேண்டுமென்பதற்கான விளக்கம் 1 கொரி 14:23–35 வசனங்களில் கொடுக்கப்பட்டுள்ளது. சபைகளில் உங்கள் ஸ்திரீகள் பேசாமலிருக்ககடவர்கள்: பேசும்படிக்கு அவர்களுக்கு உத்திரவில்லை. இவர்கள் அமர்ந்திருக்க வேண்டும், வேதமும்

அப்படியே சொல்கிறது. இது பரிசுத்த ஆவியானவர் தந்த அற்புதவரங்களை செயல்படுத்தும் விசேஷித்த நோக்கத்தோடு கூடி வந்த சந்தர்ப்பம். ஆனால், பெண்கள் ஆண்களுக்கு கீழ்ப்படிந்திருக்க வேண்டுமென்ற கொள்கையளவில், அதே கருத்துடையதுதான்.

சபையில், ஆண்களுக்குப் பெண்கள் அடங்கியிருக்க வேண்டுமென்பது அவர்களுக்கு தரக்குறைவானது அல்ல. அறிவிலும், திறமையிலும் அவர்கள் ஆண்களுக்கு குறைவானவர்களென்று வேதம் எங்கும் சொல்வதில்லை. இது, தேவன் ஒழுங்குபடுத்தின ஒரு திட்டம், அவ்வளவே. தேவனுடைய வார்த்தையை மாற்றும் அதிகாரம் மனிதனுக்கு இல்லை(உபா.4:2,5:32; 12:32,யோ 9-11. வெளி. 22:18,19).

1கொரி. 11:3 இவ்விதம் சொல்கிறது: 'ஒவ்வொரு புருஷனுக்கும் கிறிஸ்து தலையாயிருக்கிறாரென்றும், ஸ்திரீக்குப் புருஷன் தலையாயிருக்கிறாரென்றும், நீங்கள் அறிய வேண்டுமென்று விரும்புகிறேன். பிதாவாகிய தேவனுக்குக் கீழ்ப்படிந்திருப்பது குறித்து கோபமோ, அதிருப்தியோ படக் கூடாது. புருஷன் கிறிஸ்துவுக்கும், கிறிஸ்து பிதாவாகிய தேவனுக்கும் கீழ்ப்படிந்திருக்க வேண்டுமென்பதை பெண்கள் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும்.

அப்போஸ்தலன் பவுல் இன்றைக்கு இருந்தால், வேறு விதமாக உபதேசிப்பர் என்று சிலர் வாதிடுகிறார்கள். ஆனால் பவுல் தன்னுடைய ஞானத்தை கொண்டு இவைகளைப் பேசவில்லையென்பதை நாம் அறிய வேண்டும். பரிசுத்த ஆவியானவர் ஏவின காரியங்களை மாத்திரமே எழுதினார் (கொரி 2:9 – 13,14, 37). பரிசுத்த ஆவியானவர் கொடுக்கப்பட்ட தேவனுடைய வார்த்தைகள் எல்லாக் காலத்திற்கும் பொருந்தும் படியாகவே கொடுக்கப்பட்டுள்ளது. அவைகள் மாற்றப்படக்கூடாது (சங். 119:89).

ஆண்கள் மீது, பெண்கள் அதிகாரஞ் செலுத்துவதற்கு ஆதாரமாக சிலர் பழைய ஏற்பாட்டுக்குச் செல்வார்கள். மோசேயின் சகோதரியாகிய மிரியாம் இதற்கு உதாரணமாக அடிக்கடி காட்டப்படுவாள். மிரியாம் ஒரு தீர்க்கதரிசி (யாத் 15:20,21) எப்படியிருந்தாலும், அவளுடைய வேலை இஸ்ரவேலின் பெண்களுக்குள் தான் இருந்தது. ஒரு சமயம் மோசேக்கு எதிராக மிரியாம் கலகம் பண்ணினாள். அவளுக்கு குஷ்டரோகம் வரப்பண்ணி, தேவன் அவளைத் தண்டித்தார் (எண். 12:1-12).

சில சமயங்களில், இஸ்ரவேலில் நியாயாதிபதியாகவும், தீர்க்கதரிசியாகவும் இருந்த **தெபோராள்,** பெண்கள் ஆண்கள் மீது அதிகாரம் செலுத்துவதற்கு ஆதாரமாகக் காட்டப்படுகிறாள். இஸ்ரவேலில் அநேகர் தேவனுக்கு கீழ்ப்படியாமல் இருந்த காலகட்டத்தில் இது நடந்தது. அப்பொழுது தேவனுடைய ஜனங்கள் நியாயந்தீர்க்கத் தகுதியான ஆண் இஸ்ரவேலில் இல்லை. கானானியருக்கு எதிரான யுத்தத்தில் தலைமையேற்று நடத்தும்படி தெபோராள் பாராக்கை அழைத்தாள். அவன் நீ என்னோடுகூட வராவிட்டால் நான் போகமாட்டேன் என்றான் (நியா, 4:9,21).

நெகேமியா 6:14 **நொவதியாள்** என்னும் பெண் தீர்க்கதரிசியைக் குறிப்பிடுகிறது. தேவனுடைய ஜனங்களின் விரோதியாகிய சன்பல்லாத், தொபியா இவர்களால் கூலிக்கு அமர்த்தப்பட்டவள் தான் இவள். II ராஜா 22-ல் **உல்தாள்** என்னும் தீர்க்கதரிசி குறிப்பிடப் பட்டுள்ளாள், ஆனால் அவள் யாரையும் ஆளவில்லை. தேவனுடைய ஜனங்கள் மீது தன்னுடைய ஆலோசகர்களை அவளிடத்தில் தனியே பேசும்படி அனுப்பினார் (II ராஜா 22:14-20).

தேவனுடைய ஜனங்களின் முழுச்சரித்திரத்தையும் கவனித்துப் பார்த்தால், ராஜாக்கள், ஆசாரியர்கள், தீர்க்கதரிசிகள், வேதபாரகர்கள், மூப்பர் என்று இப்படி எல்லோருமே ஆண்கள் தான். தெபோராள், உல்தாள் என்ற இந்த இருவர் மாத்திரமே இதற்கு விதிவிலக்கு . இன்றைக்கு கர்த்தருடைய சபையில் பெண்கள் போதகர்களாகவும், மூப்பர்களாகவும் இருப்பதற்கு , பழைய ஏற்பாட்டிலிருந்து எந்த ஒரு ஆதாரத்தையும் தர முடியாது. ஆசரிப்புக் கூடாரமும், தேவாலயமும், சபையின் மாதிரியாக உள்ளது. எந்தவொரு பெண்ணும் ஆசரிப்புக் கூடரத்திலும், தேவாலயத்திலும் ஆசாரியர்களாக இருக்கும்படி அனுமதிக்கப்படவில்லை. ஆகையால், எந்தவொரு பெண்ணும், கர்த்தருடைய சபையிலே, ஆராதனையிலே தலைமையேற்றுச் செய்பவர்களாக இருக்க முடியாது.

இந்த உண்மையைப் புரிந்து, மனமார ஏற்றுக்கொண்டு, தேவக் காரியங்களை நாம் நடப்பிக்க வேண்டும். காலத்திற்கேற்பக் காரியங்கள் நடைபெற வேண்டுமென்று என்னுவோமானால், தேவனுடைய பார்வையில் துணிகரமுள்ளவர்களாகக் கருதப்படுவோம். இப்படிப்பட்ட துணிகரம் வேண்டாம். வேண்டவே வேண்டாம்.

தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக!
ஆமென்!! ★

வாலிபர் பகுதி

# பயிற்சியினால் பகுத்தறிதல்

சகோ. பென்னி மார்ட்டீன்

**பி**ரியமான வாலிப சகோதர, சகோதரிகளே! உங்கள் யாவருக்கும் நசரேயனாகிய இயேசுவின் நல்நாமத்தில் வாழ்த்துக்கள். பொதுவாகவே, வாலிபர்கள் தங்கள் சரீரத்தைப் பேணிக்காப்பதில் அதிக அக்கறை செலுத்துவதுண்டு.உடலுக்கு தேவையான சத்தான உணவை உட்கொள்வதிலும், உடலுக்கு தீங்கிழைக்கின்ற உணவுப் பொருள்களிலிருந்து விலகியிருப்பதிலும் அதிக அக்கறைப்படுவதுண்டு. சில வாலிபர்கள் ஒரு படி மேலே சென்று உடற்பயிற்சி செய்து தங்கள் உடலை கட்டுக்கோப்பாக வைத்துக் கொள்கிறார்கள். அப்படி உடற்பயிற்சி செய்வதில் எந்த தவறும் கிடையாது. அதனால் உடலுக்குப் பிரயோஜனம் இருக்கத்தான் செய்கிறது. ஆனால், சதா அதைப் பற்றியே சிந்தித்துக் கொண்டிருப்பது ஆவிக்குரிய வளர்ச்சியில் மிகப் பெரிய சேதத்தை ஏற்படுத்தும். அப்போஸ்தலராகிய பவுல் (1 தீமோத். 4:8)ல் சரீர முயற்சி அற்ப பிரயோஜனமுள்ளது; தேவ பக்தியானது இந்த ஜீவனுக்கும் இதற்கு பின்வரும் ஜீவனுக்கும் வாக்குத்தத்தம் உள்ளது ஆகையால் எல்லாவற்றிலும் பிரயோஜனம் உள்ளது என்று புத்திமதி சொல்கிறார். இதன் மூலம் சரீர முயற்சி அற்ப அல்லது கொஞ்ச பிரியோஜனம் உள்ளது என்பதை நாம் அறிந்து கொள்ள முடியும் இவ்வசனத்தின் மேன்மையை உணராத பல வாலிபர்கள் அழிந்து போகும் இவ்வுடலை மேம்படுத்த தங்கள் பணத்தையும், நேரத்தையும் விரயம் செய்கிறார்கள். இவ்வசனத்தில் பவுல் சரீரப்பிரகாரமான உடற்பயிற்சிக்கும், ஆவிக்குரிய உடற்பயிற்சிக்கும் இடையே உள்ள ஒப்புமையை பிரித்துக் காட்டுகிறார். சரி, இப்போது சரியான ஆவிக்குரிய உடற்பயிற்சிக்கு என்னவெல்லாம் அவசியப்படுகிறது என்பதை அறிந்து கொள்வோம்.

## I. ஆயத்தம்

பொதுவாக, சரீரப்பிரகாரமான உடற்பயிற்சி செய்வதற்கு முதலில் நாம் ஆயத்தமாக வேண்டும். அதாவது, மனதில் உடற்பயிற்சி செய்ய தீர்மானிக்க வேண்டும். பயிற்சியைத் தொடங்க விருப்பமிருக்க வேண்டும். அதைப் போலவே செயல்படுவதற்கு ஆவல் இருக்க வேண்டும். ஆவிக்குரிய உடற்பயிற்சியிலும் இது உண்மையாயிருக்கிறது. 1 பேதுரு 1:13ல் ஆகையால் , நீங்கள் உங்கள் மனதின் அரையைக் கட்டிக்கொண்டு, தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருந்து; இயேசு கிறிஸ்து வெளிப்படும் போது உங்களுக்கு அளிக்கப்படும் கிருபையின் மேல் பூரண நம்பிக்கையுள்ளவர்களாயிருங்கள் என்று வாசிக்கிறோம். எனவே, ஒருவர் ஆவிக்குரிய உடற்பயிற்சியில் ஈடுபடுவதற்கு முன்பாக மனதளவில் ஆயத்தமாக வேண்டும்.

மனதில் தீர்மானித்து ஆயத்தமானவுடனே நாம் செயல்படத் தொடங்கவேண்டும். தேவனுடைய வார்த்தையை நாம் அனுதினமும் கேட்கிறோம். அவைகளைப் உள்வாங்கிக் கொண்டு கேட்டவைகளை நாம் நடைமுறைப்படுத்தும் போது ஆவிக்குரிய உடற்பயிற்சியை செய்கிறோம். அது போல், உடற்பயிற்சி என்று வரும் போது சில காரியங்களை திரும்ப திரும்பச் செய்ய வேண்டும். ஆவிக்குரிய உடற்பயிற்சியில் எப்படி? சிறிது நேரம் ஜெபித்துவிட்டு நாம் பக்தியாக இருக்கிறோம் என்று சொல்ல முடியாது. ஒன்றிரண்டு வசனங்களை வாசித்து விட்டு நாம் தியானிக்கிறோம் என்று சொல்ல முடியாது. அதுபோல் வாரத்தில் ஒருமுறை தேவனை ஆராதித்து விட்டு நாம் தேவனுக்கு உண்மையாக இருக்கிறோம் என்று சொல்ல முடியாது. சிலர் கிறிஸ்துவிற்குள் வந்ததும் ஆரம்ப நாட்களில் மிகவும் ஊக்கமாக ஜெபிப்பார்கள். ஆனால், பாடுகள் வரும் போது அப்படியே பின்வாங்கி போவார்கள். சரீரப்பிரகாரமான உடற்பயிற்சியை ஒருவர் தொடக்கத்தில் ஆர்வத்தோடு செய்து விட்டு சில நாட்கள் கழித்து அதைத் தொடர்ந்து செய்யாத போது சரீரத்திற்கு எப்படி பாதிப்பை ஏற்படுத்துகிறாரோ, அதே போல் தான் ஒருவர் ஆவிக்குரிய உடற்பயிற்சியில் ஈடுபட்டு விட்டு அதைத் தொடர்ந்து செய்யாமல் விட்டுவிட்டால் தன் ஆத்துமாவுக்கு பெருத்த சேதத்தை ஏற்படுத்துவார். விடமுயற்சி இல்லாமல் உலகில் எந்த செயலிலும் ஜெயிக்க முடியாது. சரீரப்பிரகாரமான உடற்பயிற்சியில் கூட தொடர்ச்சி இல்லையென்றால் அது உடலில் பின் விளைவுகளை ஏற்படுத்தும். அப்படியிருக்கும் போது, ஆவிக்குரிய உடற்பயிற்சியில் தேவனுடைய வார்த்தைகளை அப்பியாசப்படுத்துவதில் தொடர்ச்சி இல்லையென்றால் அது ஆவிக்குரிய வளர்ச்சியில் தடைகளை ஏற்படுத்தும்.

## II. எதிர்க்கும் திறன்

சரீரப்பிரகாரமான உடற்பயிற்சியில் பயிற்சி செய்ய முடியாத படி அதற்கு தடைகள் ஏற்படும்போது அவைகளை எதிர்த்து தொடர்ந்து பயிற்சியில் ஈடுபட்டால்தான் உடற்பயிற்சியின் நன்மைகளை நாம் பெற்றுக்கொள்ள முடியும். இன்றைய நாட்களில் அநேக வாலிபர்கள் தங்கள் உடலைக் கட்டுக்கோப்பாக வைத்துக் கொள்ள வேண்டுமென்பதற்காக உடலை வருத்தி கடினமான பயிற்சியில் ஈடுபடுகிறார்கள். நாமும் ஆவிக்குரிய உடற்பயிற்சியில் அதாவது, தேவனுடைய வார்த்தைகளை கைகொள்ளும் போது பிசாசால் வேதனைகள் வரும் போது அவைகளை எதிர்த்து வீர நடை போட வேண்டும். அப்போது தேவன் சோதனைகளிலிருந்து தப்பித்துக் கொள்ளும் போக்கை உண்டாக்குவார் (1 கொரி. 10:13). நாம் தேவனுடைய சர்வாயுத வர்க்கத்தை எடுத்துக் கொண்டு அவைகளை எதிர்க்க வேண்டுமென்று கட்டளையிடப் பட்டிருக்கிறோம் (எபே.6:13).

கிறிஸ்தவ ஜீவியத்தில் ஏற்படும் பாடுகள், உபத்திரவங்கள், சோதனைகள் போன்றவைகளை நாம் மேற்கொண்டு, தீங்கை எதிர்த்து நலமானவைகளைப் பற்றிக்கொண்டால் தேவ பக்தியோடு ஆவிக்குரிய உடற்பயிற்சியில் ஈடுபட முடியும். நம் ஆவிக்குரிய வாழ்க்கையில் எதிர்ப்புகளோ, தடைகளோ இல்லையென்றால் நாம் மெத்தனப்போக்கை கடைபிடித்து வளராமல் இருப்போம். கிறிஸ்தவ வாழ்க்கையில் நாம் அனுதினமும் வளர வேண்டுமென்று தேவன் எதிர்பார்க்கிறார். வேத வசனங்களில் நாம் பார்க்கும் போது எருசலேமிலுள்ள சபைக்கு துன்பம் உண்டான போது அப்போஸ்தலர் தவிர, மற்ற யாவரும் சிதறப்பட்டுப் போனார்கள், சிதறிப் போனவர்கள் எங்குந்திரிந்து சுவிசேஷ வசனத்தைப் பிரசங்கித்தார்கள். சபை வளர்ந்தது (அப். 8).

## III. ஆவிக்குரிய போஷாக்கு

எப்படி சரீரப்பிரகாரமான உடற்பயிற்சிக்கு ஆகாரம் அவசியமாகிறதோ அதே போல் ஆவிக்குரிய உடற்பயிற்சிக்கும் ஆகாரம் அவசியமாகிறது. அனுதினமும் நாம் பல்வேறுபட்ட முடிவுகளை எடுக்கிறோம். அப்படி முடிவெடுப்பதில் நம்மை வழிநடத்த தேவனுடைய வார்த்தையாகிய ஆவிக்குரிய போஷாக்கு நமக்கு அவசியமாகிறது. இவ்வுலகத்தின் தத்துவ ஞானங்கள், பொன்மொழிகள் போன்றவைகள் எவ்விதத்திலும் நமக்கு ஆறுதலைத் தரவே முடியாது. எனவே, தேனிலும் இனிய தேவனுடைய வார்த்தைகளின் பற்றாக்குறையால் தான் பலர் பாவமென்னும் நோயில் சிக்கிக் கொள்கிறார்கள். இன்று பசுமைப்புரட்சி என்ற பெயரிலும், பெருகி வரும் மக்கள் தொகைக்கேற்ப உணவு தானியங்களை பெருக்குகிறோம் என்று சொல்லி முறையற்ற முறையில் நச்சு நிறைந்த, கலப்படமான, தூய்மையற்ற ஆகாரத்தை தயார் செய்கிறார்கள். அதன் விளைவாக வாயில் நுழையாத பெயர்களுடன் நோய்கள் வலம் வந்து நம்மை வாட்டுகின்றன. அதை தாக்குப்பிடிக்க முடியாமல் மனித இனம் மண்ணுக்குள் மடிந்து போகிறது. மாசும், கலப்படமும் நிறைந்த இவ்வுலகில் ஆவியாயும், ஜீவனாயும் இருக்கிற தேவனுடைய வார்த்தை மட்டுமே மாசற்ற, கலப்படமற்ற ஒன்றாக இருக்கிறது. அவைகளை நாம் ஏராளமாக, தாராளமாக உட்கொள்ளும் போது அது கசப்பான நம் வாழ்வை இனிமையாக்குகிறது. இப்பூமிக்குரிய ஆகாரத்தை நாம் தொடர்ச்சியாக உட்கொண்டு எவ்வித உடற்பயிற்சியும் செய்யாமல் இருந்தால் அது நம் உடலில் மோசமான விளைவுகளை ஏற்படுத்தும். அதேபோல் ஆவிக்குரிய போஷக்கைத் தொடர்ச்சியாக உட்கொண்டு விட்டு நம் வாழ்க்கையில் தேவனுக்கு பிரியமாக அப்பியாசப்படுத்தவில்லையென்றால் அது நம் ஆவிக்குரிய வாழ்வில் மோசமான விளைவுகளை ஏற்படுத்தும், அதற்கு அதிக விலையை கொடுக்காதபடி விழித்திருப்போம். ★

சிறுவர் பகுதி

# பிறரை மன்னிப்பது

Bro. ஏபில் நாயகம்

எனதருமை சிறு தம்பி, தங்கைகளே! உங்கள் யாவருக்கும் இயேசுவின் இன்ப நாமத்தில் வாழ்த்துக்கள். எப்படி இருக்கிறீர்கள் எல்லாரும்? நான் நலமாக இருக்கிறேன். இந்த இதழின் வழியாக உங்களை மீண்டும் சந்திப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

பிள்ளைகளே! மன்னிப்பு என்ற குணம் அல்லது பண்பு மிக முக்கியமான ஒன்றாகும். அதை அனைவரிடமும் பார்க்க முடியாது. ஆனால், அது நிச்சயமாக கிறிஸ்துவை அறிந்தவர்களிடம் இருக்க வேண்டிய ஒரு பண்பு, குணம். சிறு வயதினர்களாகிய உங்களிடமும் அந்தப் பண்பு இருக்க வேண்டும். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து, மன்னிப்பைக் குறித்து ஓர் உவமையை சீடர்களுக்கு சொன்னார். ஆம், தமது சீடர்கள் மன்னிப்பு என்ற குணத்தை பெற்றிருக்க வேண்டும் என்பதில் இயேசு கவனமாக இருந்தார்.

அந்த உவமையை நாம் மத் 18: 21–35 ல் வாசிக்க முடியும். அதில் ஒரு ராஜாவும், அந்த ராஜாவினிடத்தில் கடன் பட்டிருந்த ஊழியக்காரர்களும் இருக்கிறார்கள். ராஜாவினிடத்தில் 10,000 தாலந்து கடன் பட்டவனிடம், கடனைத்தீர்க்கும்படி கட்டளையிடப்பட்டது. அப்பொழுது கடன் பட்ட ஊழியக்காரன் ராஜாவினிடம் தாழ விழுந்து, வணங்கி தன்னிடம் பொறுமையாயிருக்க கேட்டுக்கொண்டான். அந்த ராஜா, அவன் மேல் மனதிரங்கி அவன் கடனை அவனுக்கு மன்னித்துவிட்டான்.

தனது கடன் மன்னிக்கப்பட்டபின், அவன் புறப்பட்டு தன் வீட்டிற்குச் செல்லும் வழியில், 100 வெள்ளிப்பணம் கடனாக பெற்ற ஒரு உடன் வேலைக்காரனைக் கண்டு, அவனைப் பிடித்து தொண்டையை நெரித்து, நீ பட்ட கடனை எனக்கு கொடுத்துத் தீர்க்க வேண்டும் என்றான். அந்த உடன் வேலைக்காரன் ஊழியக்காரனின் காலிலே விழுந்து, என்னிடத்தில் பொறுமையாயிரும், நான் திருப்பி கொடுத்து விடுகிறேன் என்று கெஞ்சிக் கேட்டுக்கொண்டான். ஆனால் அந்த ஊழியக்காரனோ, கடனை தீர்க்கும் வரை உடன் வேலைக்காரனை காவலில் போட்டுவித்தான்.

இந்த செய்தி, ராஜாவின் காதுக்கு சென்றுவிட்டது. ராஜா மிகுந்த கோபமடைந்து, பொல்லாத ஊழியக்காரனே நான் உன் கடனை மன்னித்தது போல, நீயும் உன் உடன் வேலைக்காரனுக்கு இரங்கி கடனை மன்னித்து இருக்க வேண்டும் தானே? நீ ஏன் அப்படி செய்யவில்லை என்று கேட்டு, அவன் பெற்ற 10,000 தாலந்து கடன் தீருமளவும் அவனுக்குத் தண்டனை கொடுத்தார்.

இது தான் அந்த உவமை. இதிலிருந்து சீஷர்கள் கற்றுக் கொள்ள வேண்டும் என்று இயேசு நினைத்த பாடம் என்ன? வச 35 ல் – 'நீங்களும் அவனவன் தன் சகோதரன் செய்த தப்பிதங்களை மனப்பூர்வமாய் மன்னியாமற் போனால், என் பரம பிதாவும் உங்களுக்கு இப்படியே செய்வார். ஆம் பிள்ளைகளே! சீஷர்களைப் போல, நாமும் கற்றுக் கொள்ள வேண்டிய பாடம் இதுதான். நாம் பிறரை மன்னிக்காமல் போனால், நம் தேவனும் நம்மை மன்னிக்கமாட்டார். எனவே, இந்த சிறுவயதிலிருந்தே நம் பிதாவுக்கு பிரியமான குணமாகிய மன்னிக்கும் பண்பைப் பெற்று வாழவேண்டும். அப்படிச் செய்வோமா ?

தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக! ★

## மனசாட்சியைப் பற்றி வேதகாமம்

1. தேவனால் நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் ஒரு அருமையான ஈவு
2. தேவனுடைய வார்த்தைகளால் படிப்பிக்கப்பட வேண்டும்.
3. உள்ளார்ந்த மனிதனின் ஒரு பகுதியாயிருக்கிறது.
4. சில வேளைகளில் நாம் குற்றம் செய்யும் போது அது நம்மை குற்றஞ்சாட்டும்.
5. சில வேளைகளில் நாம் செய்வது சரிதான் என்று நம்பவைக்கும்.

# வேத வினா போட்டி

பதிலளிப்போர் கவனத்திற்கு

**கீழ்க்கண்ட கேள்விகளுக்கு வேதவசன ஆதாரத்துடன் விடை எழுதி, தபால் மூலம் அடுத்த மாதம் 10 ம் தேதிக்குள் திருமறை ஆசான் முகவரிக்கு வந்து சேரும்படி உங்கள் முழு முகவரியுடன் அலைபேசி எண்ணையும் தவறாமல் எழுதி அனுப்பவும். (இதற்கான விடை ஆகஸ்ட் மாத இதழில்)**

(யோசுவா புத்தகத்தில் தேடிக் கண்டுபிடியுங்கள்)

1. மோசேயின் ஊழியக்காரன் யார்?
2. எதைவிட்டு வலது இடது புறம் விலகக் கூடாது?
3. ஆணைக்கு அடையாளமாக ஜன்னலில் கட்டப்பட்டிருந்தது எது?
4. சர்வ பூமியின் ஆண்டவர் யார்?
5. ''கில்கால்'' என்பதின் அர்த்தம் என்ன?
6. யோர்தானில் எடுத்துக் கொண்டு போன கற்கள் எத்தனை?
7. உருவினப் பட்டயத்தோடு நின்றவன் யார்?
8. மன்னா எப்போது நின்று போனது?
9. ஆசாரியர்கள் எத்தனைபேர் பெட்டிக்கு முன்பாகச் சென்றனர்?
10. எரிகோ பட்டணத்தை எத்தனை நாட்கள் சுற்றினார்கள்?

## ஜுன் மாத வினாக்களுக்கான விடைகள்

1. இரண்டு மூன்று சாட்சிகள்
2. லேவியருக்கு
3. அரிவாளை
4. போரடிக்கிற மாட்டை
5. துலக்கமாய்
6. ஜீவன்
7. தேவன் நமக்கு ஜீவனும் தீர்க்காயுசுமானவர்
8. தீங்கு நேரிடும்
9. யாக்கோபு....
10. மோசே..

## சரியான பதில் எழுதியவர்களில் சிலர்

| | | |
|---|---|---|
| 1. செல்வமணி குணசேகரன் | - | சென்னை |
| 2. செல்வம் | - | கோவை |
| 3.மார்கரேட் | - | சென்னை |
| 4. பாரதி | - | கோபி |
| 5. சாந்தகுமாரி | - | நாசரேத் |
| 6. சத்தியசீலன் | - | கோவில்பட்டி |
| 7.ஜெபதாய் | - | தூத்துக்குடி |
| 8. பாலராஜ் | - | மதுரை |
| 9. மேரிகிரேஸ் | - | சென்னிமலை |
| 10. ஜெயமணி ஜெயபாண்டியன் | - | கடலூர் |
| 11. ராஜேஷ் | - | சென்னை |
| 12. ஜேசுதாஸ் | - | கோவை |
| 13. அருள்ராஜ் | - | சென்னை |
| 14. ஜெயராஜ் | - | கோவை |
| 15. பிலோமினா | - | கோவை |
| 16. அபினேஷ் | - | திருச்சி |
| 17. ஈஸ்வரி | - | பவானி |
| 18. மாலதி | - | ஈரோடு |
| 19. ஜான்சி | - | ஆனைமலை |
| 20. மரகதம் | - | தேனி |

# அநேகர்

Bro. பாண்டியன்

ஆண்டவர் இயேசுவின் நாமத்தில் உங்களுக்குச் சமாதானம் உண்டாவதாக **அநேகர்** என்ற வார்த்தை பெரும் பாலானோர் அல்லது அதிகமான மக்கள் என்ற அர்த்தத்தைக் குறிக்கும். மெஜாரிட்டி என்ற ஆங்கில வார்த்தையை இதற்கொப்பாக நாம் பயன்படுத்துகிறோம். ஊரோடு இசைந்து வாழ வேண்டும் என்ற பழமொழி கூட உண்டு. ஆனால் 'கிறிஸ்தவ மார்க்கம் வித்தியாசமானது. நான் உலகத்தான் அல்லாதது போல அவர்களும் உலகத்தார் அல்ல என்று கிறிஸ்து சொல்லியிருக்கிறார். ஆக அநேகர் நடப்பது போல ஒரு கிறிஸ்தவனும் நடக்க இயலாது. உண்மை தேவனை அறியாதிருக்கிற இவ்வுலக ஜனங்கள் அஞ்ஞானிகள் என்று இயேசு சொல்லுகிறார். பலர் வெளிவேஷத்தில் மேன்மை பாராட்டுகிறார்கள் (2கொரி 5:12). ஆனால், நாம் நமக்கு சகல நன்மைகளையும் அளிக்கும் கர்த்தரைக் குறித்தே மேன்மை பாராட்ட வேண்டும்.

இவ்வுலக ஜனங்களின் மேன்மை பாராட்டல் மாமிசத்திற்கு ஏற்றபடியாக உள்ளது. அதாவது, பணம், அழகு, அந்தஸ்து,ஆஸ்தி, பதவி போன்ற காரியங்களில் பெருமைப்பட்டுக்கொள்கிறார்கள். ஆனால், இவையெல்லாம் நிரந்தரமானதல்ல என்று வேதத்தில் காண்கிறோம். அநேகர் செல்லும் வழியில் நாம் செல்ல முடியாது. கேட்டுக்குப் போகிற வழி விசாலமாயிருக்கிறது. அதில் பிரவேசிக்கிறவர்கள் அநேகர் என்றார் ஆண்டவர். நம்மை இடுக்கமான வாசல் வழியாய் செல்ல அறிவுறுத்துகிறார். நீதி 19:6-ல் பிரபுவின் தயையை அநேகர் வருந்திக்கேட்பார்கள் என்று காண்கிறோம். செல்வந்தர்கள் தயவை நிறையப் பேர் எதிர்பார்ப்பார்கள். அதனால் தான் ஏழைகளைவிட அவர்களுக்கு சிநேகிதர்கள் அதிகம். ஆனால் அதுவும் தற்காலிகமாக இருக்கிறது. அதே போல் 'பதவியில் இருப்பவர்களின் முகதரிசனத்தை அநேகர் தேடுகிறார்கள். ஆனால், நியாயம் கர்த்தராலே மட்டுமே தீரும் என்று (நீதி 29:26) பார்க்கிறோம். ஆக இந்த வாழ்வில் நமக்கு பொருளாதாரத் தேவையோ அல்லது நமக்கு கிடைக்க வேண்டிய நியாயமோ எல்லாம் நம்முடைய தேவனாலே மாத்திரமே திருப்திகரமாய் சந்திக்கப்படும். அதனால் தான் ஆண்டவர் இவைகள் எல்லாம் உங்களுக்கு கிடைக்க வேண்டுமானால் 'முதலாவது தேவனுடைய ராஜ்ஜியத்தையும், அவருடைய நீதியையும் தேடுங்கள்' என்றார்.

உலக காரியங்களில் மேன்மை பாராட்டுவது புத்தியினமானது என்கிறார் பவுல். மேலும் உலகத்தார் அநேகர் செல்லும் போக்குச்சரியில்லை என்று வேதத்தில் கர்த்தர் உரைக்கிறார், ' நான் இந்த ஜனத்தின் வழி நடவாத படி எனக்கு கர்த்தர் புத்தி சொன்னார். இந்த ஜனங்களின் கட்டுப்பாடு, ஒழுக்கம் சரியில்லை! அவர்கள் பயப்பட வேண்டியதிற்கு பயப்படாமல் வீணாக கலங்குகிறார்கள். நீங்கள் தேவனுக்கு மட்டும் பயப்படுங்கள்' (ஏசா 8:11-15). இவ்வுலகம் பயப்படவேண்டிய 'விபச்சாரப் பாவத்திற்கு' பயப்படாமல் எய்ட்ஸ்க்குப் பயப்படுவது அதற்கு ஒரு எடுத்துக்காட்டாக உள்ளது. யோவான் ஸ்நானகன் பிறப்பு நிமித்தம் அநேகர் சந்தோஷப்படுவார்கள் என்று தூதன் அறிவித்தான். அதற்குத் காரணம் பொல்லாத பாவ இருளில் இருக்கும் மக்களை ஒளியாகிய கிறிஸ்தவண்டை வழி நடத்தும் உன்னதப்பணியை அவன் செய்த படியால் அநேகர் சந்தோஷப்பட்டார்கள், பிற்பாடு கிறிஸ்துவனிடம் சேர்ந்த ஜனங்கள், யோவான் பற்றி பேசும் போது இவன் ஒரு அற்புதத்தையும் செய்யவில்லை ஆனால் கிறிஸ்துவைப்பற்றி மிகச்சரியாக அறிவித்தான் என சந்தோஷப்பட்டார்கள்.

யோவான் ஸ்நானகன் முதற்கொண்டு ஆண்டவர் அப்போஸ்தலர் எல்லோருமே மனந்திரும்புங்கள் பரலோக ராஜ்ஜியம் சமீபித்திருக்கிறது என்று ஊழியத்தை ஆரம்பித்தார்கள். அவர்கள் பிரசங்கித்த போது சமீபமாயிருந்த அந்த ராஜ்ஜியம் அப்.2ம் அதிகாரத்தில் சபையாக ஆரம்பித்தது என்று காண்கிறோம். ராஜ்ஜியமாகிய சபையில் இப்போது நாம் மனந்திரும்பி இரட்சிக்கப்பட்டு இணைக்கப்பட்டுள்ளோம். மனந்திரும்புதலுக்கேற்ற கனிகளை நாம் கொடாவிட்டால், கிறிஸ்து சொன்னது போல் **அந்நாளில் அநேகர் வந்து கர்த்தாவே கர்த்தாவே** என்று கூப்பிட்டாலும் **அக்கிரமச்செய்கைக்காரரே என்னை விட்டு அகன்று போங்கள் என்றும் உங்களை அறியேன் என்றும் சொல்லுவேன்**' ஆகவே நாம் அநேகரைப் பின்பற்றாமல் ஒரு சிலராக இருந்தாலும் கிறிஸ்துவையே பின்பற்றுவோம்.

கிறிஸ்துவின் காலத்தில் இஸ்ரவேலர் மட்டுமல்லாது புறஜாதிகளும் தேவனிடம் சேருவார்கள் என ஆண்டவர் முன்னுரைத்தார். அநேகர் கிழக்கிலும் மேற்கிலும் இருந்து வந்து பரலோக ராஜ்ஜியத்தில், ஆபிரகாம், ஈசாக்கு யாக்கோபு என்பவர்களோடே பந்தியிருப்பார்கள் (மத்தேயு 8:11). கிறிஸ்துவுக்காய் இழந்தவர் ஒருவரும் தரித்திரர் ஆனதில்லை, ராஜ்ஜிய மேன்மைக்காய் கஷ்டப்பட்டோர் நஷ்டப்பட்ட தில்லை என்று நாம் பாடுவது அநேகருக்கு ஞாபகம் இருக்கும். பேதுரு ஆண்டவரிடம், இதோ எல்லாவற்றையும் விட்டு உம்மைப் பின்பற்றினோமே?

என்று கேட்ட போது **அப்போஸ்தலர்கள் ராஜ்ஜியமாகிய சபையில் கிறிஸ்துவுடனே ஆளுகை செய்யவும், மறுமையிலும் ஆசீர் இருக்கும் என்றும் சொன்ன இயேசுவானர்** ஆகிலும் முந்தினோர் அநேகர் பிந்தினோராயும் பிந்தினோர் அநேகர் முந்தினோரையும் இருப்பார்கள் மத் 19:30. உலக உத்தியோகங்களில் இருப்பதைப் போல் தேவ ஆசீர்வாதம் பெறுவதற்கு சீனியாரிட்டி கிடையாது என்பதையே அப்படிஉரைத்தார். நாம் எந்த அளவுக்கு தேவனிடம் நெருங்கி, ஜெபித்துக் கீழ்படிந்து நடக்கிறோமோ அந்த அளவிற்கே தேவ ஆசீரும் நமக்கு உண்டாயிருக்கும், நாம் அவரை விட்டால் அவரும் நம்மை விட்டுவிடுவார் (2 நாளா 15:2).

ஆண்டவர் இயேசுவின் அற்புதங்களைக் கண்ட அநேகர் அவர் மீது விசுவாசம் வைத்தார்கள். ஆனால் அவருடைய உபதேசத்தைக் கேட்ட போது இது கடினமான உபதேசம், யார் இதைக் கேட்பார்கள் என்று அநேகர் பின்வாங்கிப் போனார்கள் (யோவா 6:60,66) இன்றைக்கும் இரட்சிக்கப்பட்டவர்கள் அநேகர் சபையில் காணப்படாமற் போவதற்குக் காரணம் அவர்களுக்கு உபதேசத்தைப் பின்பற்ற மனமில்லை, தம்மை விசுவாசித்த யூதரை நோக்கி, நீங்கள் என்னுடைய உபதேசத்தில் நிலைத்திருந்தால் மெய்யாகவே என் சீடராயிருப்பீர்கள் (யோவா 8:31) என்று இயேசு சொன்னார். இன்றைய நாட்களில் கிறிஸ்துவின் நாமத்தைச் சொல்லி அநேகர் வஞ்சிக்கின்றனர். சொல்வது யாராக இருந்தாலும் அது கிறிஸ்துவின் உபதேசமா என்று உறுதிப்படுத்தி அதிலே நடப்பது, நம் அனைவரின் கடமையாக இருக்கிறது. ஆதாமின் மூலம் அநேகர் பாவிகளாக்கப்பட்டது போல, இயேசுவின் மூலம் அநேகர் நீதிமான்களாக்கப்படுகிறார்கள் (ரோமர் 5:19). போதிக்கிறவர்கள் சரியான சத்தியத்தை போதிக்கவும் அதன் படி நடக்கவும் வேண்டியிருப்பதால், உங்களில் அநேகர் போதகராகாதிருப்பீர்களாக என்று அப். உபதேசம் நம்மை எச்சரிக்கிறது (யாக் 3:1). மேலும், கள்ளத்தீர்க்கதரிசிகளும் தோன்றி மக்களை வஞ்சிப்பார்கள் என்ற எச்சரிக்கையையும் நமக்குக் கொடுக்கப்பட்டுள்ளது. அவர்களுடைய கெட்ட நடவடிக்கையை அநேகர் பின்பற்றுவார்கள். அவர்கள் நிமித்தம் சத்திய மார்க்கம் தூஷிக்கப்படும் (I பேது 2:2) ஆகவே, அநேகரைப் போல் நாம் நடவாமல் ஜீவனுக்கு போகிற இடுக்கமான வாசல் வழியாய்பிரவேசித்து தேவனுக்கு மகிமையாய் வாழ்வோம். தேவக்கிருபையும் சமாதானமும் நம் அனைவரோடுங்கூட இருப்பதாக. ஆமென் ★

# ஒன்றான மெய்த்தேவன்

Bro. ஆறுமுகம்

– சென்ற இதழ் தொடர்ச்சி

★. ஆகாய் 2:5-7 **நீங்கள் எகிப்திலிருந்து புறப்படுகிற போது நான் உங்களோடே உடன் படிக்கை பண்ணின வார்த்தையின்படியே, என் ஆவியானவரும் உங்கள் நடுவில் நிலை கொண்டிருப்பார்; பயப்படாதேயுங்கள். சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்; கொஞ்ச காலத்துக்குள்ளே இன்னும் ஒரு தரம் நான் வானத்தையும், பூமியையும் சமுத்திரத்தையும் வெட்டாந்தரையையும் அசையப்பண்ணுவேன். சகல ஜாதிகளையும் அசையப்பண்ணுவேன், சகல ஜாதிகளாலும் விரும்பப்பட்டவர் வருவார்; இந்த ஆலயத்தை மகிமையினால் நிறையப் பண்ணுவேன் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்**, என்று தீர்க்கதரிசி ஆகாய் இஸ்ரவேலருக்குச் சொல்லுகிறார்.

இதிலே கர்த்தர் என்பது பன்மைச் சொல் (எபிரேயச் சொல் அகராதி எண் 430, க்கு ஒப்பான 3068 , 69), அவர்தம்மை நான் என்றும், அசையப் பண்ணுவேன் என்றும் ஒருமையில் பேசுவது போல் காணப்படுகிறது, சேனைகளின் கர்த்தர் எபிரேய வாசகப்படி, பன்மையில் செல்லப்படுகிறது. மேலும், தமது ஆவியானவர் தமது ஜனங்கள் மத்தியிலே நிலை கொண்டிருப்பதையும், சகல தேசத்தாருக்கும் எதிர்பார்த்த மேசியாவாகிய விரும்பப்பட்டவர் வருவார் என்றும் சொன்னார். மத்தேயு 3:16,17 ல் நாம் காணும் மூவருடைய பிரசன்னத்தையும், மத்தேயு 28: 19 ல், தமது ஒற்றுமையைக் குறிப்பிட்டு தேவன் பேசுகிறாரா? அல்லது இருவரும் ஒரே உருவமாவதைப் பேசுகிறாரா? உணர்வுள்ளவர்கள் யோசிக்கட்டும்.

★. யோவான் 17: 20–23; 15:24; 6:56, ஆகிய இந்த வசனங்களில், கிறிஸ்துவின் ஜெபத்தைக் காண்கிறோம்.

1. இயேசுவும் பிதாவும் ஒன்றாயிருப்பது குறிப்பிடப்படுகிறது (யோவான் 17:21,22).

2. அப்போஸ்தலர்கள் 12 பேரும் ஒன்றாயிருக்க வேண்டும் (யோவ.17:20) என ஜெபித்தார்.

3. அவர்களுடைய உபதேசங்களைக் கேட்பவர்கள் எல்லாரும் ஒன்றாயிருக்க வேண்டும் எனவும் அப்போஸ்தலரோடும், தேவன் மற்றும் கிறிஸ்துவோடும் ஒன்றாயிருக்கவும் ஜெபித்தார் (யோவ. 17:22).

4. கிறிஸ்து அவர்களிலும், பிதாவானவர் கிறிஸ்துவிலும் இருக்கும் படி ஜெபித்தார் (வச. 23).

5. மேலும், யோவான் 15: 4 ல் தம்மைப் பின்பற்றுவோர் அனைவரும் கிறிஸ்துவில் நிலைத்திருக்கும்படியும், கிறிஸ்து அவர்களில் நிலைத்திருக்கும்படியும் போதித்தார்.

6. கர்த்தருடைய பந்தியில் நிலைத்திருப்பவர்கள் கிறிஸ்துவிலே நிலைத்திருப்பவர்கள் கிறிஸ்துவிலே நிலைத்திருக்கிறார்கள் என்று அவர் போதித்தார்.

ஆக, பிதா, கிறிஸ்து, அப்போஸ்தலர்கள் உபதேசத்தைக்கேட்டு இன்று வரை கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டுள்ள கோடிக்கணக்கானோர் அனைவரும் ஒன்றாயிருப்பது எப்படி? இதுவும் ஒற்றுமையைக் குறிப்பதேயன்றி ஒரே உருவமாயிருப்பதைத் குறிப்பதில்லை. இதுவும் பன்மையில் ஒருமையாக கர்த்தராகிய இயேசு, சீஷராக்கப்படுபவர்களை, பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் **நாமத்திலே** ஞானஸ்நானம் பெறும்படி கட்டளையிடுகிறார். இதிலே மூன்று தெய்வீக நபர் தத்துவத்தை அவர் குறிப்பிட்டாலும், மூவருக்கும் உள்ள சம அதிகாரத்தைக் காண்பிக்கும் பொருட்டு நாமத்திலே என்று ஒருமையில் குறிப்பிட்டார். ஆக, இந்த வசனங்களும் பன்மையைப் பேசும் ஒருமை தான் என்பது தெளிவு.

★. ஏசாயா 6:8 ஏசாயாவை தீர்க்கதரிசன ஊழியத்திற்கென அழைக்கும் தேவன் **பின்பு; யாரை நான் அனுப்புவேன், யார் நமது காரியமாகப் போவான் என்று உரைக்கிற ஆண்டவருடைய சத்தத்தைக்கேட்டேன்...** என்று ஏசாயா குறிப்பிடுகிறார். இங்கே ஆண்டவர் என்று குறிப்பிடுவது எபிரேயச் சொல் 'அடோனஸ்' (எண் 3068). யோவான் 13:13, 14 ல் இயேசு தம்மை 'போதகர்' என்றும் **ஆண்டவரென்றும்** தமது சீஷர்கள் அழைப்பது சரியே என்று குறிப்பிடுகிறார். கர்த்தர் என் ஆண்டவரை நோக்கி என்று தேவனாகிய கர்த்தரால் அழைக்கப்பட்ட ஆண்டவர் இவரே! இயேசு இதை யோவானில் வலியுறுத்தினார். இவர் தான் தேவதத்துவக் குடும்பத்தின் சார்பில் பேசுகிற ஆண்டவர் முன்பு **நான்**என்றவர் அடுத்து **நமது** என்று பன்மையில் குறிப்பிடுகிறார். இதுவும் பன்மையைக் குறிக்கும் ஒருமையே.

ஆக, **தேவன்** எனும் வார்த்தையில் ஒருமையும் இருக்கிறது. பன்மையும் இருக்கிறது. பன்மையைக் குறிக்கும் ஒருமை மாத்திரம் 2570 முறை குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த வார்த்தையை முழுமையாக ஆராயாமலும், உறுதிபடுத்திக் கொள்ளாமலும், தங்கள் சுய புத்தியைச் சார்ந்து, தங்கள் சுயக் கருத்தை திணிக்க முயற்சிப்பது ஒற்றைக்கண் பார்வை கோளாறேயொழிய வேறல்ல. ஆங்கிலத்தில் இதை **Singled Eye Deficieney** என்பார்கள்.

தங்களை நரக ஆக்கினைக்கு ஆயத்தப்படுத்திக் கொள்வதில் ஆர்வம் காட்டும் இவர்கள் இனியாகிலும் மனந்திரும்புவார்களானால் நலமாயிருக்கும்.

★

# உண்மையை அறிந்து கொள்ளுதல்

Bro. ஹென்றி மோகன்

மனிதனுடைய வாழ்க்கையில் அறிந்து கொள்ள வேண்டிய உன்னதமான உண்மைகளை அறிந்து கொள்ளாமலேயே மாண்டு போனவர்கள் ஏராளம். காரணம் உலகம் பொய்யினால் நிறைந்து காணப்படுகிறது. பொய் நிறைந்த உலகத்தில் வாழும் மனிதனும் பொய்யாகவே வாழ்ந்து பழகினதால் உண்மைகளைக் கூட பொய்யாகத்தான் நினைக்கின்றான். பொய்யை நம்பி வாழ்ந்து பழகினவர்கள் உண்மையை ஏற்றுக் கொள்ளவும் மறுக்கின்றனர். ஆனால், உண்மையைப் பொய் ஒருபோதும் அழிக்க முடியாது.

உலகத்தில் பொய்யானவைகளையும், பொய்யானவர்களையும் உண்டாக்கினவன் பிசாசு (யோவான் 8:44). கர்த்தருடைய வார்த்தை உத்தமும் அவருடைய செய்கையெல்லாம் உண்மையுமாயிருக்கிறது (சங்33:4). எனவே, பொய்யுரையாத தேவன் தேவபக்திக்கேதுவான உண்மையை அறிகிற அறிவும் விசுவாசமும் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களுக்கு உண்டாகும்படி தமது வார்த்தையை வெளிப்படுத்தினார். (தீத்து1:3-4)மனிதன் உண்மைகளை அறிகிற அறிவை அடையும்படி தேவவாக்கியங்களை தேவன் அருளிச் செய்திருக்கிறார் (3:16). எனவே எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும் உண்மையை (II தீமோ) அறிகிற அறிவை அடையவும் தேவன் சித்தமுள்ளவராயிருக்கிறார் (1தீமோ 2:4).

எனவே, பொய்யானவர்கள், நிறைந்துள்ள உலகத்தில் வேத வசனங்களின் மூலமாக உண்மைகளை அறிந்து விசுவாசித்து ஏற்றுக்கொள்ளும்படி தேவன் தாமே உங்களுக்கு அருள் புரிவாராக.

**சிருஷ்டிப்பில் உள்ள உண்மைகள்**

ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார். (ஆதி1:1) பின்பு தேவன் வானத்திலும் பூமியிலும் நாம் காண்கிற சகலத்தையும் உண்டாக்கினார். மனிதன் அவைகளை தன்னுடைய வாழ்க்கைக்கு

பயன்படுத்திக் கொள்ளும்படி உண்டாக்கினாரேயன்றி அவைகளை தொழுது கொள்வதற்காக அல்ல. எனவே உங்கள் தேவனாகிய கர்த்தர் வானத்தின் கீழெங்கும் இருக்கிற எல்லா ஜனங்களுக்கும் ஏற்படுத்தின வானத்தின் சர்வ சேனைகளாகிய சந்திர சூரிய நட்சத்திரங்களை நோக்கி அவைகளைத் தொழுது சேவிக்க இணங்காதபடிக்கு உங்கள் ஆத்துமாக்களக் குறித்து மிகவும் எச்சரிக்கையாயிருங்கள் (உபா4:19) என்று கட்டளையிட்டிருக்கிறார். ஆனால் மனிதனோ தேவனுடைய சத்தியத்தை பொய்யாக மாற்றி சிருஷ்டிகரைத் தொழுது சேவியாமல் சிருஷ்டியைத் தொழுது சேவித்தான் (ரோமர்1:25) இந்நிலை இன்றும் நீடித்திருப்பதற்கு காரணம் அறியாமையே. ஆகவே, இயேசு சொல்கிறார் உண்மையை அறிந்து கொள்ளுங்கள். உண்மை உங்களை அறியாமையிலிருந்து விடுதலையாக்கும் (யோவான் 8:32) பின்பு தேவன் பூமியானது ஜாதி ஜாதியான ஜீவஜந்துக்களாகிய நாட்டு மிருகங்களையும் ஊரும் பிராணிகளையும் காட்டு மிருகங்களையும் ஜாதி ஜாதியாக பிறப்பிக்கக்கடவது என்றார். அது அப்படியே ஆயிற்று (ஆதி1:24) பின்பு தேவன் ஆதாம் ஏவாளைப் பார்த்து நீங்கள் பலுகிப் பெருகி பூமியை நிரப்பி, அதைக் கீழ்ப்படுத்தி சமுத்திரத்தின் மச்சங்களையும் ஆகாயத்து பறவைகளையும் பூமியின் மேல் நடமாடுகிற சகல ஜீவஜந்துக்களையும் ஆண்டு கொள்ளுங்கள் என்று சொல்லி அவர்களை ஆசீர்வதித்தார் (ஆதி1:28).

மனிதன் சகல ஜீவஜந்துக்களையும் ஆண்டு கொள்ளும்படி எல்லாவற்றிற்கும் மேலானவனாக உண்டாக்கினார். ஆகவே, சகல ஜீவஜந்துக்களும் மனுஷனுக்குக் கட்டுப்பட்டிருப்பதை பல நிகழ்ச்சிகளில் கண்கூடாகக் காண்கிறோம். மேலும், மனுஷனைப் பற்றிய பயமும் அச்சமும் பூமியிலுள்ள சகல மிருகங்களுக்கும் ஆகாயத்திலுள்ள சகல பறவைகளுக்கும் உண்டாயிருக்கும் என்றும் பூமியிலே நடமாடுகிற யாவும் சமூகத்தின் மச்சங்கள் யாவும் மனுஷனுக்கு தேவனால் கையளிக்கப்பட்டன என்று வேதாகமத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. எனவே, வேதாகமத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ளவாறு மனுஷனைப் பற்றிய பயமும் அச்சமும் சகல ஜீவஜந்துக்களிடமும் இருப்பதையும் பல நிகழ்ச்சிகளில் கண்கூடாகப் பார்க்கிறோம். மேலும், நடமாடுகிற ஜீவஜந்துக்கள் யாவும் மனுஷனுக்கு ஆகாரமாய் பசும்பூண்டுகளை மனுஷனுக்குத் தந்தது போல

அவைகள் எல்லாவற்றையும் தேவன் மனிதனுக்காக கொடுத்திருக்கிறார் [ஆதி9:2-3]. எனவே, உலகத்தின் பல பகுதிகளில் வாழ்ந்து வரும் மனுஷர்கள் அவர்களின் பழக்கத்திற்கு ஏற்றவாறு சகல ஜீவஜந்துக்களையும் ஆண்டு கொள்ளுவதும், அவைகளை ஆகாரமாக புசிப்பதையும் பல நிகழ்ச்சிகளின் வழியாக பார்க்கிறோம். எனவே ஜீவஜந்துக்கள் யாவும் மனுஷனுக்காகவும் அவனுக்கு பயனுள்ளதாய் இருக்கவும் உண்டாக்கப்பட்டதேயன்றி அவைகளைத் தொழுது கொள்வதற்காக அல்ல. ஆகவே, பூமியிலுள்ள யாதொரு ஊரும் பிராணிகள் உருவும் பூமியின் கீழ்த் தண்ணீரிலுள்ள யாதொரு மச்சத்தின் உருவுமாயிருக்கிற இவைகளில் யாதொரு உருவுக்கு ஒப்பான விக்கிரகத்தை உங்களுக்கு உண்டாக்காதபடிக்கும் அவைகளைத் தொழுது சேவிக்க இனங்காதபடிக்கும் உங்கள் ஆத்துமாக்களைக் குறித்து மிகவும் எச்சரிக்கையயாயிருங்கள் [உபா4:18-19] என்று தேவன் கட்டளையிட்டிருக்கிறார்.

இந்த உண்மைகளை அறியாதவர்கள் அழிவில்லாத தேவனுடைய மகிமையை அழிவுள்ள மனுஷர்கள், பறவைகள் மிருகங்கள், ஊரும் பிராணிகள் ஆகிய இவைகளுடைய ரூபங்களுக்கு ஒப்பாக மாற்றி சிருஷ்டிகரைத் தொழுது சேவியாமல் சிருஷ்டியைத் தொழுது சேவித்தார்கள் [ரோ1:23,25] இன்னும் சேவிக்கிறார்கள். இந்நிலைக்குக் காரணம் மனுஷனுடைய அறியாமையே. எனவே, இயேசு சொல்லுகிறார் உண்மையை அறிந்து கொள்ளுங்கள் உண்மை உங்களை அறியாமையிலிருந்து விடுதலையாக்கும் [யோ8:32] என்று.

– தொடர்ச்சி அடுத்த இதழில் ★

## தேவன் நமக்கு துணையாயிருப்பதால் கிடைக்கும் பலன்கள்

1. தேவனுடைய நீயாயத்தீர்ப்பு நீதியுள்ளது. தேவன் அவனவனுடைய நீதிகளுக்குத் தக்கதாய் அவனவனுக்குப் பலனளிப்பார் [ரோமர் 2:6].

2. ஆதலால், நாம் இரக்கத்தைப் பெறவும் ஏற்றசமயத்தில் சகாயஞ்செய்யுங் கிருபையை அடையவும் தைரியமாய்க் கிருபாசனத்தடையிலே சேர முடியும் [எபிரெயர் 4:16].

3. நாம் முதலாவது தேவனுடைய ராஜ்ஜியத்தையும் அவருடைய நீதியையும் தேடும்போது தேவன் நம் தேவைகளை சந்திப்பார் [மத்தேயு 6:33].

# வேதாகம கேள்வி - பதில்

**கேள்வி:** பாவங்களை அறிக்கையிடுவது பற்றி என்ன நினைக்கிறீகள்? நீங்கள் ஆராதனையின் போது அழைப்புப் பாடலில் சில கிறிஸ்தவர்கள் முன்பாகச் சென்று பாவங்களை அறிக்கையிடுவதை அறிந்திருக்கலாம். இது எப்பொழுது அவசியமாகிறது?

அறியாமையினாலோ அல்லது பெலவீனத்தின் காரணமாகவோ நீங்கள் பாவம் செய்வீர்கள். நீங்கள் சோதனையை எதிர்க்கத்தக்கதாக பலத்தில் வளர முடியும். ஆனால் உங்கள் வாழ்க்கையில் இனிமேல் ஒருபோதும் வராது என்கிற நிலையை ஒரு போதும் எட்டவே முடியாது. ஆனால், ஒரு கிறிஸ்தவன், ஒளியில் நடக்கும் போது மன்னிப்பின் நிச்சயம் உங்களுக்கு உண்டு (1யோவான் 1:7).

1 யோவான் 1:9 ல் பாவங்கள் அறிக்கையிடப்பட வேண்டுமென்று வாசிக்கிறோம். இந்த வசனம் தேவனிடத்தில் பாவங்களை அறிக்கையிடுவதைக் குறிக்கிறது. நாம் எப்போதெல்லாம் தவறு செய்துவிட்டோம் என்று உணர்கிறோமோ அப்போதெல்லாம் உண்மையான மனந்திரும்புதலோடு தேவனிடத்தில் அறிக்கையிட வேண்டும். நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் அருமையான வாக்குத்தத்தம் நாம் அப்படி அறிக்கையிட்டவுடனேயே தேவன் நம்மை மன்னித்துவிடுகிறார் என்பதாகும். (ஏற்கனவே கிறிஸ்தவராயிருக்கிற ஒருவர் இவ்விதமாகத்தான் மன்னிப்பைப் பெறுகிறார் என்பதை மனதில் வையுங்கள். ஆனால் கிறிஸதவரல்லாத ஒருவர் இந்த சிலாக்கியத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்றால் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற வேண்டும்).

ஆனால், எப்போது பாவங்கள் மற்றவர்களிடத்தில் அறிக்கையிடப்பட வேண்டும்? யாக் 5:16 நம் குற்றங்களை ஒருவருக்கொருவர் அறிக்கையிட வேண்டும் என்று சொல்கிறது. எப்போது மற்றும் எந்த அளவுக்கு இது அவசியமானது?

முதலாவது, அறிக்கையிடுதல் என்கிற வார்த்தை பாவங்களை மற்றவர்களிடத்தில் வெளிப்படுத்துவது என்று பொருள்படாது. மாறாக, அவைகளை ஒத்துக்கொள்வது என்று பொருள்படும். சிலர் இது ஒருவனுடைய இருதயங்களிலுள்ள அந்தரங்கமான காரியங்களை மற்றவர்களுக்கு அறிவிப்பது எனப் பொருள்படுவதாக கூறுகிறார்கள். ஆனால், இதன் பொருள் அதுவல்ல.

மற்றவர்களைப் பாதிக்கிற காரியமாக இருந்தாலோ அல்லது அவர்களுடைய உதவி நமக்குத் தேவைப்படுகிற காரியமாக இருந்தாலோ நாம் மற்றவர்களிடத்தில் அறிக்கையிட வேண்டும். உதாரணமாக மற்றவர்கள் புண்படும்படியான ஏதோ ஒரு காரியத்தை நீங்கள் அவனிடத்தில் அறிக்கையிட வேண்டும். சில பாவங்கள் எல்லோருக்கும் தெரியவரும் பட்சத்தில் சபையார் எல்லோரிடத்திலும் அறிக்கையிடுவதற்கு, அது ஏதுவாகிறது. ஏனென்றால், நீங்கள் செய்த பாவம் பொதுவாக எல்லோருக்கும் தெரிந்திருக்கிற படியால், நீங்கள் மனந்திரும்பிவிட்டீர்கள் என்பதை எல்லோருக்கும் முன்பாக அறிக்கையிடுவது அவசியமாகிறது.

சபையார் எல்லோரும் அறிந்திருக்கிற பாவத்தை ஒருவர் சபையார் முன்பாக அறிக்கையிடுவதற்கு பொருத்தமான நேரம் அழைப்புப் பாடல் தான். பாவங்களை அறிக்கையிடுவதற்கான வழி இது மட்டுமல்ல. கடிதத்தின் மூலமாகவோ, அறிவிப்பின் மூலமாகவோ நிச்சயமாகவே பாவங்களை அறிக்கையிட முடியும். இருந்த போதிலும், சபையார் முன்பாக வந்து அறிக்கையிடுவதே நடைமுறைக்கு சாத்தியமானதும், திருப்திகரமான விதமுமாகும்.

பாவங்களை எல்லோருக்கும் முன்பாக அறிக்கை செய்வது சம்பந்தமாக இரண்டு நிலைகள் உள்ளன. அவைகள் தவிர்க்கப்பட வேண்டும். முதலாவதாக, சிலர் தங்கள் உண்மையற்ற தன்மை பிறரால் வெளிப்படையாக அறிவிக்கப்பட்டாலும் கூட அவைகளை வெளிப்படையாக சபையார் முன்பாக அறிக்கையிட விருப்பமில்லாமல் இருப்பது. அநேகமாக, பெருமை அவர்கள் அறிக்கையிட தடையாக இருக்கலாம். இரண்டாவது, சம்பந்தப்பட்டவர்களுக்கு இடையே சிறந்த முறையில் தீர்த்துக் கொள்ள வேண்டிய தனிப்பட்ட , சொந்தப் பிரச்சனைகளுக்கு கூட சபைக்கு முன்பாக அடிக்கடி போக வேண்டியது அவசியமாகும் என எண்ணுவது.

இங்கே நாம் பின்பற்ற வேண்டிய சுலபமான வழிமுறைகள் என்னவென்றால் நாம் நம்முடைய பாவங்களை வெளிப்படையாக அறிக்கையிட வேணடும். அது யாரும் அறியாத இரகசிய பாவமாக இருந்தால் தேவனிடத்தல் மட்டும் அறிக்கையிடுங்கள். அந்தப் பாவம் சிலருக்கு மட்டும் தெரிந்திருந்தால் அவர்களிடமும் தேவனிடமும் மட்டும் அறிக்கையிடுங்கள். அது எல்லோருக்கும் பொதுவாகத் தெரிந்திருந்தால் அந்தப் பாவத்தை சபையார் எல்லோருக்கும் முன்பாகவும் அறிக்கையிட வேண்டும்.

அப், 8: 13–24 வசனங்களில் சமாரியாவிலுள்ள சீமோனைப் பற்றி நாம் வாசிக்கிறோம். பதிமூன்றாம் வசனத்தில் அவன் ஞானஸ்நானம் பெற்று கிறிஸ்தவனானதை வாசியுங்கள். ஆனால், 18, 21 வசனங்களில் சீமோனுடைய கடுமையான பாவத்தையும் அதன் காரணமாக போதுருவினுடைய கடிந்து கொள்ளுதலையும், நாம் கற்றுக்கொள்கிறோம். பின்னர், போதுரு மனந்திரும்பி தேவனை நோக்கி வேண்டிக்கொள்(வசனம்22)என்றார்.

இருபத்தி நான்காம் வசனத்தில் சீமோன் பேதுரு விடம் தனக்காக ஜெபிக்கும் படியாக கேட்டுக்கொண்டான். இந்த உதாரணம், ஞானஸ்நானம் பெற்ற ஒரு விசுவாசிவெளிப்படையாக பாவம் செய்யும்போது, மனந்திரும்பிப் பாவமன்னிப்புக்காகத் தனக்காக மற்றவர்கள் ஜெபிக்கும்படி கேட்டுக்கொள்ளவேண்டும் என்று கூறுகிறார்.

பாவ அறிக்கை மற்றவர்களிடத்திலோ அல்லது சபையார் எல்லோருக்கும் முன்பாகவோ அவசியப்படும் போது அதைத் தவறவிடக்கூடாது. சபையார் எல்லோருக்கும் முன்பாக ஒருவர் பாவத்தை அறிக்கையிட்டாலும், தனிப்பட்ட முறையில் தேவனிடத்தில் பெரும்பாலும் அறிக்கையிட வேண்டும். இத்தகைய அறிக்கைகள் சிந்தனையுடனும், குறிப்பாகவும், செய்த பாவங்களைக் குறித்து உண்மையான மனந்திரும்புதலுடனும் இருக்க வேண்டும். ★

## நாளும் நடப்பும்

- சவூதியில் முடிவுக்கு வந்தது பெண்கள் கார் ஓட்டுவதற்கான தடை.
- உலகின் இரண்டாவது இளவயது கிராண்ட்மாஸ்டர் என்ற தகுதியை சென்னை வீரர் பிரக்ஞானந்தா பெற்றார்.
- நாட்டிலேயே முதல் முறையாக நீர் மின் உற்ப்பத்தி குறித்த அருங்காட்சியகம் நீலகிரி மாவட்டத்தில் அமைக்கப்பட்டுள்ளது.
- மும்பையில் பெய்துவரும் கனமழையால் இயல்பு வாழ்க்கை முற்றிலும் பாதிப்பு
- பணியின்போது கட்டுமான தொழிலாளர் இறந்தால் ரூ 5 லட்சம் வழங்கப்படும் – தமிழக அரசு
- உலகக்கோப்பை கால்பந்து போட்டியில் பிரான்ஸ் அணி குரோஷியாவை வீழ்த்தி இரண்டாம் முறை கோப்பையைப் பறித்தது.